பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper




# உதயன்

விலை ரூபா 3-50




சுடர் 5: சுக்கில ஹூ பங்குனி மீ 23 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1410 றமழான் பிறை 8 (05-04-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 52

# பிரேமா அழைத்தாலும் பிரபா கொழும்பு செல்லமாட்டார்!

## நேற்று வெளிநாட்டுப் பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டியில் அவரே தகவல்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

கொழும்புக்கு வரும்படி ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா அழைப்பு விடுத்தாலும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் கொழும்புக்குச் செல்ல மாட்டார்.

நேற்று வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் திரு. பிரபாகரனே இத்தகவலை வெளியிட்டார்.

கோண்டாவிலுக்கு அண்மையில் உள்ள ஓரிடத்தில் வைத்து நேற்று நண்பகலில் திரு. பிரபாகரன் வெளிநாட்டுச் செய்தியாளர்கள் சிலருக்குப் பேட்டியளித்ததாகத் தெரியவருகிறது.

இந்தப் பேட்டியின்போது—

"கொழும்புக்கு வரும்படி ஜனாதிபதி திரு பிரேமதாஸா அழைப்பு விடுத்தால் அவரைச் சந்திக்க நீங்கள் கொழும்புக்குச் செல்வீர்களா?" என ஒரு செய்தியாளர் கேட்டார்.

"எனக்கு பல்லாயிரக்கணக்கான ஆதரவாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நான் தமிழ்ப் பிரதேசத்தில் இருந்து வெளியே செல்வதை விரும்பவில்லை. ஆகவே நான் கொழும்புக்கு போக மாட்டேன்"– என்று திரு. பிரபாகரன் பதிலளித்ததாகத் தெரியவருகிறது.

"தமிழீழ கோரிக்கையை நீங்கள் கைவிட்டு விட்டீர்களா?" என்று ஒரு செய்தியாளர் கேட்டதற்கு—

"எம்மீது அடக்குமுறை

(7 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவுடன் பேச்சு நடத்த பிரபாகரனுக்கு விருப்பம் என்கிறார் நெடுமாறன்

சென்னை, ஏப்ரல் 5

பழையவற்றை மறந்து விடுதலைப்புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் இந்தியாவுடன் பேச்சு நடத்த விரும்பம் கொண்டு இருப்பதாக தமிழக அரசியல்வாதி திரு. பெ. நெடுமாறன் கூறினார்.

திரு. பிரபாகரனின் இந்த விருப்பத்தைத் தான் இந்திய வெளியுறவு அமைச்சர் குஜ்ராலிடம் கூறியிருப்பதாகவும் திரு. நெடுமாறன் மேலும் சொன்னார்.

இந்தியப்படை இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்திய இழப்புக்களுக்காக சுமார் ஒரு கோடி ரூபாவை தமிழர்களின் புனர்வாழ்வுக்காக இந்திய அரசு வழங்க வேண்டும் என்றும் திரு. நெடுமாறன் கேட்டுக்கொண்டார். (ஒ-எ)

## முச்சந்தி முரளி



பிரதான பேச்சிலை புறக் கணித்துவிட்டு, நிகழ்ச்சி வர்ணனையை மட்டும் தமிழிலையும் நடத்தி என்ன பிரயோசனம்...?

## குண்டுவெடித்து ஐவர் பலி

லாகூர், ஏப்ரல் 5

பாகிஸ்தானின், லாகூர் நகரத்தின் சந்தைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 5 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கும் அதிகமானோர் காயம் அடைந்தனர்.

காயமடைந்தோரில் 9 பேர் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

சந்தையில் பொதுமக்கள் பொருட்களை கொள்வனவு செய்து கொண்டிருந்த போதே குண்டு வெடிப்பு இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-6)

## இனப் பிரச்சினைக்குத் தீர்வு: விட்டுக் கொடுத்தல், புரிந்துணர்வு மூலம் சாத்தியம் - ஜனாதிபதி பிரேமா

கொழும்பு, ஏப்ரல் 5

நாட்டின் இனப் பிரச்சினை விரைவில் தீர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். அதற்கான முயற்சிகளில் அரசாங்கம் இப்போது ஈடுபட்டுள்ளது.

விட்டுக்கொடுப்பதன் மூலமும் பரஸ்பரம்புரிந்துணர்வை ஏற்படுத்துவதன் மூலமும் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா, நேற்று இரண்டாவது நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்துக் கொள்கை விளக்கவுரை ஆற்றுகையில் தெரிவித்தார்.

ஜனாதிபதி தமது விளக்க உரையில் தெரிவித்த முக்கிய விடயங்கள் வருமாறு:–

எனது அரசாங்கம் நீதியையும், நியாயத்தையும் நிலைநாட்டுவதற்கான அரசியல் மனஉறுதியைக் கொண்டுள்ளது.

காணிப் பங்கீட்டுக்கும் அதே கொள்கையே கடைப்பிடிக்கப்படும். இந்த வருடத்திற்குள் 10 லட்சம் ஏக்கர் காணி 8,00,000 குடும்பங்களுக்கு அந்த அடிப்படையில்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டம் முற்றாக நீக்கப்படும்

கொழும்பு, ஏப் 5

கூடிய விரைவில் அவசரகாலச் சட்டத்தை முற்றாக நீக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.

இந்த தகவலை ஜனாதிபதி திரு. ஆர் பிரேமதாசா நேற்று நிகழ்த்திய அரசாங்க கொள்கை விளக்கவுரையில் தெரிவித்தார்.

அவர்மேலும்கூறியதாவது: நீதி, நியாயம், சமத்துவம் ஆகியன சிறந்து விளங்கும் சமுதாயம் ஒன்றைக் கட்டி எழுப்புவதற்கு நாம் அனைவரும் பாடுபட வேண்டும். என்று அவர் கேட்டுக்கொண்டார்,

### வழமை நிலைமை

நாட்டின் பொருளாதார சமூக வாழ்க்கைத்துறைகள்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக் கட்சியுடன் ம.ஐ.மு., சோஷலிச முன்னணி எம்.பிக்களும் பகிஷ்கரித்தனர்

கொழும்பு, பெப்.5

நேற்று நடைபெற்ற இரண்டாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடர் வைபவத்தை எதிர்பார்க்கப்பட்டதுபோல சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம். பிக்கள் பகிஷ்கரித்தனர்.

மக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கிய சோஷலிச முன்னணி உறுப்பினர்களும், ஜனாதிபதி பங்குபற்றிய கூட்டத் தொடர் ஆரம்ப வைபவத்தைப் பகிஷ்கரித்தனர்.

அரசாங்கக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம். பிக்கள், தமிழர் விடுதலைக்கூட்டணி, மற்றும் வடக்குக் கிழக்கைச் சேர்ந்த சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பி

(7 ஆம் பக்கம் பார்க்க)

## ஓரிரு தினங்களில் பென்ஷன்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

புத்தாண்டையொட்டி இம் மாத பென்ஷன் இன்னும் ஓரிரு தினங்களில் வழங்கப்பட இருக்கிறது.

பென்ஷன் வவுச்சர்கள் கொழும்பில் இருந்து இங்கு வந்து சேர்ந்துள்ளன.

பணம் வந்து சேர்ந்ததும் உடன் பென்ஷன் வவுச்சர்கள் அனுப்பப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## தமிழ் மொழி நேற்று முற்றாகப் புறக்கணிப்பு!

கொழும்பு, ஏப்ரல் 5

ஜனாதிபதி திரு ஆர். பிரேமதாசா தமது கொள்கை விளக்க உரையை நேற்று சிங்களத்தில் மட்டுமே ஆற்றினார்.

தனது சிங்களப் பேச்சின் தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்புகள் நாடாளுமன்ற பதிவேட்டில் (ஹன் சார்ட்டில்) சேர்க்கப்படும் என்று தமது உரையின் ஆரம்பத்தில் அவர் தெரிவித்திருந்தார்.

தமிழும் முழு அளவில் நடைமுறையில் உத்தியோக மொழியாக்கப்பட்ட பின்னர் ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் உரையாற்றுவது இதுவே முதல் தடவையாகும்.

தமிழ் மொழி நியாயமான அளவு உபயோகம் இருந்த போது, அதாவது ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் 1989 பெப்ரவரியில் கண்டி எண்கோண மண்டபத்தில் வைத்து திரு. பிரேமதாசா ஆற்றிய உரைக்கு சமகால தமிழ் மொழிபெயர்ப்பு வழங்கப்பட்டது.

தமிழுக்கு வழங்கப்பட்ட அந்தஸ்து சட்டரீதியாக உயர அதன் பாவனை தேய்ந்து போவது ஏனோ என்று தமிழ் மக்கள் கேள்வி எழுப்புகிறார்கள். (அ)

## யாழ். மாவட்ட புனரமைப்பு வேலைகள் தனியார் நிறுவனங்கள் வசம்

### நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

யாழ். மாவட்டத்தில் புனரமைப்பு வேலைகளைத் துரிதமாகச் செய்து முடிப்பதற்காக அரச சார்பற்ற தனியார் நிறுவனங்களிடம் வேலைகள் ஒப்படைக்கப்பட இருக்கின்றன.

யாழ். அரசாங்க செயலகத்தில் நேற்று மாலை நடந்த புனரமைப்புக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிறட் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும், திணைக்கள பிரதிநிதிகளும், ஐ.நா. அகதிகள் ஸ்தானிகராலய அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் வீடமைப்பு, மற்றும் கட்டடங்கள் ஆகியவற்றை புனரமைக்கும் வேலைகளை வழங்குவது பற்றி முக்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## அங்காடி வியாபாரிகள் இன்று முதல்கஸ்தூரியார் வீதியில்

யாழ்ப்பாணம், ஏப் 5

யாழ். நகரப் பகுதியில் உள்ள அங்காடி வியாபாரிகள் இன்று கஸ்தூரியார் வீதியில் தமக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் வியாபாரத்தை ஆரம்பிப்பார்கள்.

நேற்றுமாநகரசபையில் சமுகமளித்த 26 வியாபாரிகளுக்கும் 'லொத்தர்' மூலம் இடம் தெரிவுசெய்யப்பட்டது.

ஆஸ்பத்திரிவீதி, மின்சார நிலையவீதி, பஸ் நிலையத்துக்கு அண்டிய பகுதிகளில் வியாபாரம் செய்தவர்களே புதிய இடத்துக்குச் செல்கிறார்கள்.

அதேநேரம் பழைய சந்தைப்பகுதியில் இருந்தவர்கள் அவ்விடத்தில் இருந்து வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.

பஸ்நிலையப் பகுதியில் அன்னாசி வியாபாரம் செய்பவர்கள் கொள்வனவுசெய்தபழங்கள் முடியும்வரை அதாவது எட்டாம்திகதிவரை வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள் என்றும் பின் கஸ்தூரியார் வீதியில் ஒதுக்கப்பட்ட இடத்துக்குச் செல்லவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-3)

## பாதிப்புற்ற 45 ஆயிரம் வீடுகள் புனரமைக்கப்படவுள்ளன

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

யாழ்– மாவட்டத்தில் கடந்த கால சம்பவங்களால் பாதிக்கப்பட்ட 45 ஆயிரத்து 383 வீடுகள் புனரமைக்கப்படவேண்டியுள்ளன.

நேற்று செயலகத்தில் நடந்த கூட்டத்தில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

'ஏ' தரத்தில் 29 ஆயிரத்து 426 வீடுகளும், 'பி' தரத்தில் 6 ஆயிரத்து 402 வீடுகளும், 'சி' தரத்தில் 8 ஆயிரத்து 464 வீடுகளும், 'எவ்' தரத்தில் ஆயிரத்து 91 வீடுகளும் புனரமைக்கப்பட வேண்டியுள்ளன.

இவ்வருட முடிவுக்குள் 17 ஆயிரத்து 384 வீடுகளைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## மற்றொருதொகுதி நகைகள் இன்று வந்து சேரலாம்

### தவறியோருக்கு 20 இல் கடைசிச் சந்தர்ப்பம்

யாழ்ப்பாணம், ஏப், 5

யாழ் ஸ்ரான்லிவீதி, யாழ். பிரதானவீதி, புங்குடுதீவு, கன்னாதிட்டி, சங்கானை, யாழ். நவீனசந்தை, சாவகச்சேரி, பளை ஆகிய மக்கள் வங்கிக்கிளைகளில் அடகு வைத்து கடந்தவருடம் செப்டம்பர்மாதம் அளவில் மீளப்பெறுவதற்காக பணம்செலுத்தியவர்களது நகைகள் இன்று வியாழக்கிழமையே கொழும்பில் இருந்து வந்துசேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 2ஆம் திகதி இந்த நகைகள் கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட இருந்தன.

நகைகள் வந்து சேர்ந்ததும் பத்திரிகை விளம்பரம் மூலமாக நகைகள் வழங்கும் திகதிகள் அறிவிக்கப்படும் என்று யாழ் மக்கள் வங்கி பிராந்திய முகாமையா

(7 ஆம் பக்கம் பார்க்க)

### சுப நேரம்

05-04-1990

வியாழக்கிழமை பங்குனி 23

சுபநேரம்:

07-39முதல் 09-09 வரை

இராகுகாலம்

01 -39 முதல்03-09வரை

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

## காரைநகர் முகாம் விஸ்தரிப்பு விடயம்; கடற்படை அதிகாரிகள் - புலிகள் பேச்சு!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

காரைநகர் கடற்படை விஸ்தரிப்பு பிரச்சினை குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழுவுக்கும் கடற்படை அதிகாரிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் காரைநகர் கடற்படை முகாமில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றதாகத் தெரியவருகிறது.

அண்மையில் அரசாங்கப் பிரதிநிதியாகக் கலந்துகொண்ட அமைச்சர் ஜனாப். ஏ. ஸி. எஸ். ஹமீதுக்கும், விடுதலைப் புலிகளின் உயர் மட்டக் குழுவுக்கும் இடையில் பலாலியில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்தொடராகவே —

காரைநகர் கடற்படை முகாமில் நேற்று பேச்சுக்கள் நடைபெற்றன.

இந்தப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகளின் சார்பில் யாழ் மாவட்டத் தலைவர்கள் பங்குபற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது. கடற்படை அதிகாரிகள் தரப்பில் 'அட்மிரல்' பதவியில் ஒருவரும் 'கப்டன்' பதவியில் ஐந்து பேரும் பங்குபற்றியதாகக் கூறப்பட்டது.

காரைநகர் கடற்படை விஸ்தரிப்புக்கு எதிராக விடுதலைப்புலிகள் கடும் ஆட்சேபம் தெரிவித்திருப்பதும்—

இதனையடுத்து முகாம்விஸ்தரிப்பைத் தற்காலிகமாக நிறுத்துவதாகப் பலாலிப் பேச்சுக்களின்போது அரச தரப்பில் உறுதி கூறப்பட்டதும் தெரிந்தவையே.

நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுக்களின்போது கடற்படை முகாம் எல்லைகள்பற்றி ஆராயப்பட்டதாகவும்—

பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெறவிருப்பதாகவும் தெரியவந்தது: (உ)

## மாகாண சபைகளை சிறப்பாக இயக்குவது பற்றி ஆராயக் குழு

மாகாணசபைகள் சிறப்பாக இயங்குவது தொடர்பாக ஆராய்வதற்காக அரசாங்கம் குழு ஒன்றை அமைக்க உள்ளது.

மாகாணசபை ஊழியர் சம்பளப் பிரச்சினை, ஆட்சேர்ப்பு மற்றும் முக்கிய விடயங்கள் குறித்து இக்குழு விரிவாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் எனத் தெரியவருகிறது.

பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா இந்த க்குழுவை விரைவில் நியமனம் செய்வார். (ஒ)

## நகைமுகனை பிணையில் விடுவதற்கு நீதிபதி மறுப்பு

தேசத்துரோக குற்றச்சாட்டின் பேரில் கைதாகி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள நகைமுகன் நேற்று சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். நகைமுகனை பிணையில விடுவதற்கு நீதிபதி மறுத்துவிட்டார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதி எனக்கூறிக் கொண்டு புதுடில்லியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில்

(7-ஆம் பக்கம் பார்க்க)

## காமினி மீது கண்!

கொழும்பு. ஏப் 5

நாடாளுமன்றக் கூட்டத் தொடரைஆரம்பித்துவைத்து ஜனாதிபதிநேற்று உரையாற்றிய வைபவத்தில் முன்னாள் அமைச்சர் திரு. காமினி திசநாயக்கா அரசாங்க தரப்பில் பின் வரிசை ஆசனத்தில் அமர்ந்திருந்தார்.

எல்லோரது கண்களும் திரு. காமினி மீதே விழுந்தன.

### நோன்பு திறக்கும் நேரம்

5-4-90

ஸஹர் முடிவு 4 -32

நோன்பு துறக்கும் நேரம் 6 - 21

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள டீப்பிறீசர் உடன் விற்பனைக்குண்டு 46, 4 ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம். (3218)

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள டபிள் டோர்[இரண்டு கதவு] G.E.C. குளிர் சாதனப் பெட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி ஈஸ்வரி ஜுவல்லர்ஸ் 177, கஸ்தூரியார் வீதி, [வின்சர் தியேட்டர்முன்பாக] யாழ்ப்பாணம். (3219)

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் பருத்தித்துறை வீதியிலிருந்து 200 யார் தூரத்தில் நல்ல சுற்றாடலில் 2 பரப்புக் காணி தனிக்கிணற்றுடனும் மின்சார வசதியுடனும் உடன் விற்பனைக்குண்டு. இல. 38 திருநெல்வேலி றோட், திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (3204)

அரசாங்க அனுமதி பெற்று இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள புதிய பம்பாய் வெண்காய விதைகள் கீழ்வரும் இடங்களில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. நா. சின்னத்துரை, மே/பா C.O. சிங்கராசா, அராலி தெற்கு, சிவஐங்கரன் ஸ்ரோர்ஸ், (மருந்துக்கடை) கொட்டைக்காடு, அராலி. (3045)

பூரண விளைத் திறனுடைய பம்பாய் வெண்சாய விதை ரம்பூர் சிகப்பு ரகம் விற்பனைக்கு உண்டு. கிலோ 375 ரூபா பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3215)

Honda CD 50 இளச்மொடல் (Red Line - Indicator Model) இரண்டு உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: :"அலோமாஸ்" பஸ் நிலையம் முன்பாக, சுன்னாகம். [12270]

### தேவை

கடைச்சல் இயந்திர சக் [Lathe Chuck] தேவை. ஓமேகா, மானிப்பாய், வீதி, யாழ்ப்பாணம். (3221)

### மணப்பெண்கள் தேவை

இலங்கைத் தமிழ் 27 வயது வெளிநாட்டில் இருந்து வந்து திரும்பிப் போகும் கிறிஸ்டியன் சிவில் எஞ்சினியருக்கு ஆங்கிலம் பேசக் கூடிய அழகிய மணப்பெண் தேவை. எல்லா வித மணமக்கள்: எம்மிடம் இருக்கின்றார்கள். மங்கள ஏஜென்சி யாழ்ப்பாணம், (3208)

### பயிலுனர் தேவை

தமிழ் அச்சுக் கோப்பாளர் பயிலுனர்களுக்கு இடமுண்டு க. பொ. த (சா. த) பரீட்சையில் தமிழ் மொழிப்பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். நேரில் வரவும். செட்டியார் அச்சகம், 430, காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம். (சி/4228)

### மணப்பெண்கள் தேவை

27 வயது செவ்வாய் குற்றமுள்ள பிரான்சில் வேலை பார்க்கும் வேளாள மணமகனுக்கு அங்கே வேலை செய்யும் மணமகளும். 29 வயது இந்து வேளாள U.K.I.C. M.A. க்கு B Sc Doctor Engineer, Accountant மணமகளும்தேவை.மங்கள ஏஜென்சி யாழ்ப்பாணம். (3209)

### சேவை

சிறந்த முறையில் விடியோ படம் பிடித்துக் கொள்ளவும், பாடல்கள் பதிவு செய்து கொள்ளவும் நாடுங்கள்: பாரத் விடியோ சென்ரர், 51/1, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (சி/4158)

### கை மாறிவிட்டது

கோண்டாவில் வடக்கு ஐயாத்துரை இராசரத்தினம் ஆகிய எனது கிறோ சைக்கிள் 1-4-90 இல் சின்லக்கடை சந்தையில் கைமாறிவிட்டது. அத்துடன் அடையாள அட்டையும் தவறிவிட்டது. தவறுதலாக வந்த சைக்கிள் போனக்ஸ் ஆகும். ஆகவே தயவு செய்து தவறுதலாக எடுத்துச் சென்றோர் கோண்டாவில் கிராமமுன்னேற்றச் சங்கத்தில் ஒப்படைக்கவும். (12275)

### விற்பனையாளர் தேவை

O/L கணிதம் A/L கணக்கியல் பாடங்களில் சித்தியடைந்த மாநகரசபை எல்லைக்குள் வசிக்கும் பெண் பிள்ளைகள் தேவை. எதிர்பார்க்கும் சம்பளத்துடன் விண்ணப்பிக்கவும். No. 669, C/o உதயன். C/4226)

### புத்தக ஓடர்

மங்கை, அம்புலிமாமா, ஆனந்தவிகடன், கல்கண்டு, கோகுலம், இரத்தினபாலா, பாலமித்திரா, சுமங்கலி, யூனியர்விகடன், யூனியர் போஸ்ட், இதயம், குங்குமம், இந்தியா ருடே, (தமிழ் - ஆங்கிலம்)பொறின்லைன், ஸ்போட்ஸ்ரார், ஏனைய எல்லா இலங்கை இந்திய சஞ்சிகைகளும். மீண்டும். பதிவு செய்யப்படுகின்றன. V.P. யிலும் பெறலாம். ஸ்ரீகாந் புத்தக சாலை. இல 165, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்புறம் யாழ்ப்பாணம். (சி/4227)

### புலமைப்பரிசில் பரீட்சை

புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை 09-04-90 திங்கள் மு.ப 8.30/மு.ப. 11.00இற்கு நடைபெறும் பதிவு செய்யவும். புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினா/விடை (புதிய பதிப்பு) எமது நிலையத்தில் விற்பனைக்குண்டு விலை ரூபா 25.00 புதிய கல்வி நிலையம் கெங்காதரன் ஆஸ்பத்திரி முன்பாக வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (3048)

### Typewriters

Typewriters வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும், நாடுங்கள் FUDO, 39/17 மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (Shabra-Samy & Co அருகாமையில்) (சி/4209)

### மணப்பெண்கள் தேவை

சவூதியில் இருந்து வந்த இந்து வேளாள மணமகனுக்கும், கொழும்பில் வேலை. செய்யும். 34 வயது இந்து வேளாள வங்கி ஸ்ராவ் ஆபிஸருக்கும்(Staff Officer) மணப்பெண்கள் தேவை. மங்கள ஏஜென்சி யாழ்ப்பாணம். [3210]

### 90 ஆம் ஆண்டுப் பஞ்சாங்கம்

இரகுநாதையர் வாக்கிய, திருக்கணிதபஞ்சாங்கம் வியாபாரிகட்கு தொகையாக விசேட சழிவுடன் விற்பனைக்குண்டு. ஸ்ரீ காந் புத்தக சாலை, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன் பாக, யாழ்ப்பாணம். (சி/3487)

### BILL CLERK

Wanted for Well Established Hardware Firm in Jaffna an Experienced Bill Clerk. Apply With Bio Data Stating Salary Expected. No: 663, C/o Uthayan. (3046)

### வாழ்த்துமடல்

புது வருட வாழ்த்து மடல்கள் பல வித டிசைன்களில் விற்பனையாகிறது. மற்றும் மார்ச், ஏப்ரல் மங்கை, அம்புலிமாமா வெளிவந்து விட்டன. ராஜன் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். [3201]

# சில தனியார் விறகு காலைகளில் பழைய இறாத்தல் படி உபயோகம்

கொழும்புத்துறை ஏப்ரல் 5 யாழ். மாவட்டத்தில் உள்ள சில தனியார் விறகு காலைகளில் பழைய இறாத்தல் படிகளே இன்றும் பாவிக்கப்படுகின்றன. இச்சட்ட விரோத நடவடிக்கை கண்டு பிடிக்கப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ். மாவட்ட நிறுவைகள், அளவைகள் திணைக்களப் பரிசோதகர் திரு. கா. நாகலிங்கம் மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார்.

விறகு காலைகளில் பயன்படுத்தப்படும் படிகள், தராசுகளுக்குக் கட்டாயம் முத்திரையிட்டுக் கொள்ள வேண்டும் என்றும், யாழ். நகரில் விறகு காலை உரிமையாளர்கள் எவரும் இன்னும் தமது தராசுப் படிகளுக்கு முத்திரையிட்டுக் கொள்ளவில்லை என்றும் விறகு காலைகளில் கிலோகிராம் படிகளையே பாவிக்க வேண்டும் என்றும் அவர் அறிவித்துள்ளார். (இ-30

## உற்சவமும் ஆராதனையும்

அரியாலை மேற்கு ஸ்ரீ பத்திர காளி அம்மனின், வருடாந்த உற்சவமும் ஆராதனையும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (க - 5)

# கவனிப்பு பகுதி 1

எங்கள் பரம்பரையில் கையாண்டு வந்த சித்த வைத்திய முறைகளோடு மேலும் மதிநுட்பம் கொண்டு செய்த சித்த வைத்திய ஆராய்வின் பயனாக கீழ் காணும் வியாதிகளுக்கு வியக்கத் தக்க சிகிச்சை முறைகளையும் கண்டுள்ளோம் விரும்பின்:

யாழ்ப்பாணம், திருநெல்வேலி கிழக்கு, ஆடியபாதவீதி

[இராசபாதைச் சந்தி] யில் வசிக்கும்

இராமசாமி வைத்திய (மாடி வீடு) ருடன் கலந்தாலோசிக்கவும்.

1. நித்திரை குறைவு (Insomnia)
2. ஆனந்த வாய்வு (Hysteria)
3. அந்தர வாய்வு (Mania)
4. கல்லடைப்பு (Renal colic)
5. சலப் போக்கில் ஒழுங்கீனம் (Prostatic Enlargement etc)
6. சோபை ரோகம் (Nephrotic Syndrome)
7. ஆண் மலடு (Sperm Count Deficiency)
8. கருப்பாசய ரோகங்கள் (Womb Disorders)

(12159)

# மீண்டும் கருவாகி வருவாய்



## பவானந்தன் சரவணானந்தன் (ராஜன்)

[லெப் - பவான்]

தாயின் மடியில்:- 04- 07- 1971

தாயக மண்ணில்:- 19- 03- 1989

திதி: 06- 04- 1990

ஓராண்டு முன்னர் ஒரு காலைப் பொழுது ஈழத்து நரிகளும், இந்திய ஓநாய்களும் உன்னைக் கொன்று ஊளையிட்டு மகிழ்ந்தன.

உன்னுடைய இரத்தம் மண்ணில் உறைந்து கிடந்தது
உன் குருதியைக் கண்டு கொதித்தெழுந்த உன் பள்ளித் தோழர்கள்
பலர் படிப்பைத் துறந்து பாசறைப் பயிற்சிக்குச் சென்றனர்
இன்று நீ நடந்த பாதையிலே அவர்கள் நடக்கின்றார்கள்
அவர்களிலே உனது ஆன்மாவைக் கண்டு ஆறுதலடைகிறோம்.

எனினும் உனது தாகம் தீரவில்லை!
உனது இலட்சியம் ஈடேறவில்லை!
அன்பு மகனே!
நீ எருவாய்ப் போன புனித தாயகம் உருவாகும் பொழுது
மீண்டும் கருவாகி வருவாய்! காலமெல்லாம் காத்து நிற்போம்.

என்றும் உன்னை நேசிக்கும்:-
—குடும்பத்தினர்

சி. பவானந்தன்,
சிவசக்தி கோவிலடி,
அச்சுவேலி.

(3132)

## அக்குபங்சர் பரீட்சை முடிவுகள் 1989

வட இலங்கை அக்குபங்சர் சங்கத்தால் நடாத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்தோர் விபரம்

டாக்டர்:- கே. பாலகிருஷ்ணன்.
டாக்டர்:- எல், எல். மைக்கேல்.
டாக்டர்:- ஆர். பாஸ்கரன்.
டாக்டர்:- ரி. குலசிங்கம்
டாக்டர்:- எஸ் இரவீந்திரகுமார்.
டாக்டர்:- (செல்வி) என். கௌசலா.
டாக்டர்:- (செல்வி) ரி. சிவசோதி.
டாக்டர்:- (செல்வி) எஸ். லோகேந்திரா.

இவர்களுக்கு 8-4-90 ஆந் திகதியன்று யாழ்ப்பாணம் நாவலர் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறும் ஹனிமன் விழாவில் டிப்ளோமா வழங்கப்படும்.

செல்வி. ஈ. கதிரவேலு.
தலைவர் செயலாளர்.
வட. இல. அக்குபங்சர் சங்கம். [3129

## பனை அபிவிருத்திச் சபையின் மாணவர் கட்டுரைப் போட்டி

பனை அபிவிருத்திச் சபை, பாடசாலை மாணவர்களுக்கிடையேயான கட்டுரைப் போட்டியொன்றை நடாத்தவிருக்கின்றது.

இக்கட்டுரைப் போட்டி 14 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கானதும், 14 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கானதுமாகிய இரண்டு பிரிவுகளாக நடாத்தப்படுகின்றது.

கட்டுரைத் தலைப்பு "நமது சமூக பொருளாதார அபிவிருத்தியில் பனைவளத்தின் பங்கு" என்பதாகும். பனைவளத்தின் சமூக பொருளாதார முக்கியத்துவத்தை வெளிக்கொணர்வதாகக் கட்டுரைகள் அமைந்திருக்க வேண்டும். அத்தோடு கட்டுரையின் மொழிநடையும், சீரான அமைப்பும் கவனத்திற் கொள்ளப்படும். கட்டுரைகள் சொந்தக் கையெழுத்தில் 8"X12" அளவுத்தாளில் ஓரே பக்கத்தில் எழுதப்பட்டதாக இருக்கவேண்டும். ஒவ்வொரு பிரிவுக்கும் 1 ஆம், 2ஆம், 3ஆம் பரிசுகளாக முறையே ரூபா 500/-, ரூபா 300/-, ரூபா 200/- வழங்கப்படும்.


கட்டுரைகள் போட்டியாளரால் சொந்தமாக எழுதப்பட்டது என்பதைத் தலைமையாசிரியர் அல்லது பெற்றோர் உறுதிசெய்து, பெயர், பாடசாலை, வகுப்பு, வயது ஆகிய விவரங்களுடன் எதிர்வரும் 21-04-90க்கு முன்பு செயலாளர், பனை அபிவிருத்திச் சபை, தேசிய வீடமைப்புச் செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். கட்டுரை அனுப்பும் உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் "கட்டுரைப் போட்டி" என்று குறிப்பிடப்பட வேண்டும்.

குறிப்பு:- பனை அபிவிருத்திச் சபை ஊழியர்களும், அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப் போட்டியில் கலந்துகொள்ள தகுதியற்றவர்களாவர்.

தலைவர்
பனை அபிவிருத்திச் சபை.

(C/4425)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்



தோற்றம்: 6 - 11 - 1929

மறைவு: 8 - 3 - 1990

திரு.
## சோமசுந்தரம் பரமேஸ்வரன்

(செல்லத்தம்பி)

அன்புடையீர்!

நிகழும் சுக்கில வருடம் பங்குனித் திங்கள் 25 ஆம் நாள் (7 - 4 - 90) சனிக்கிழமை பகல் எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக் கிருத்தியத்தில் பங்குபற்றி அன்னாரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்தித்து, நண்பகல் மதியபோசனத்திலும் பங்கு பற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
மனைவி, மக்கள், மருமகன்

7 ஆம் கட்டை,
உடுப்பிட்டி.

[சி-3127]



# ★ இன்று (05-04-1990) குதூகல ஆரம்பம் ★

சகலவிதமான ★ ஆங்கில மருந்துவகைகள் ★ பிளாஸ்ரிக் பொருட்கள் ★ பால்மா வகைகள் ★ சில்வர் பொருட்கள் ★ மணிக்கூட்டு வகைகள் ★ மற்றும் அன்பளிப்புப் பொருட்கள்

ஆகியவற்றை மெத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

● நண்பர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள், அனைவரையும் திறப்பு விழாவிற்கு வருக வருகவென அன்புடன் அழைக்கின்றோம்.

## ★ லிங்ஸ் பார்மஸி & குறோசரி ★

தட்டாதெருசந்தி, K. K. S. வீதி, யாழ்ப்பாணம்.

(காவஸ் சேர்விஸ் & ரேடிங்கஸ் இன் கிளை ஸ்தாபனம்)

[சி-4223]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்
உறாஅர்போன்று உற்றார் குறிப்பு.

**பொருள்:**

பகை கொள்ளாத கடுஞ்சொல்லும் பகைவர் போல் பார்க்கும் பார்வையும் புறத்தே அயலார் போல் இருந்து அகத்தே அன்பு கொண்டவரின் குறிப்பாகும்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி:2288
05 - 04 - 1990 த. பெ இலக்கம் 25

# சரியான மருந்து தேவை

திறந்தவெளிப் பல்கலைக் கழகத்தின் யாழ்ப்பாணப் பிரிவு பெரும் நெருக்கடியான நிலையில் இருப்பதாகத் தகவல் வெளியாகி உள்ளது. அங்கு இயங்க வசதி செய்யப்பட்ட பல துறைகளில் சேர்ந்து பயில்வதற்கு, போதிய எண்ணிக்கையானோர் முன்வரவில்லை, முயற்சி எடுக்கவில்லை என்பது செய்தி.

தொழில் புரிபவர்களுக்கு உயர்கல்வி வசதி செய்து கொடுப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு திறந்த வெளிப்பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. சந்தர்ப்ப வசத்தால் உயர்கல்வித் துறைக்குக் காலடி எடுத்து வைக்க முடியாமல் போனவர்கள், பொருளாதாரக் கஷ்டம், குடும்பப் பொறுப்பு என்பவற்றால் உயர்கல்வியை எட்டியும் பார்க்க வாய்ப்பு இல்லாமற் போனவர்கள் ஆகியோர் உயர்கல்வி பெறுவதற்கு உதவுவதே திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தின் பிரதான குறிக்கோளாக இருந்தது.

கொழும்பில் (நாவலவில்) தலைமையகத்தைக் கொண்டியங்கும் திறந்தவெளிப் பல்கலைக்கழகத்துக்கு நாட்டின் பல திசைகளிலும் பதினான்கு கிளைகள் உள்ளன. அவற்றில் யாழ்ப்பாணப் பிரிவில் மட்டுமே தமிழ் மாணவர்கள் பயிலக்கூடிய வாய்ப்பு உண்டு.

எனினும் யாழ்ப்பாணப் பிரிவில் இயங்க ஏற்பாடுகள், வசதிகள் செய்யப்பட்ட ஒன்பது துறைகளில் இரண்டு மட்டுமே குறைந்த எண்ணிக்கையான மாணவர்களுடன் இயங்குகின்றன. ஏனைய ஏழு துறைகளும் போதிய எண்ணிக்கையானோர் விண்ணப்பிக்காததால் ஸ்தம்பித்துக் கிடக்கின்றன. இதனால் யாழ்ப்பாணப் பிரிவை மூடிவிடும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. நெருக்கடி நிலை தோன்றி உள்ளது.

உயர்கல்வி பெறுவதற்குப் போதிய வசதிகள் இல்லை என்ற குறை நிலவும் காலம் இது. உயர்கல்வி பெறத் தகுதி இருந்தும் அதனைப் பெற முடியாமல் பெரும் எண்ணிக்கையானோர்கள் விடுபடுகிறார்கள் என்ற கவலை கல்விமான்களையும், எதிர்காலச் சந்ததியினரின் நலனில் அக்கறை உள்ளவர்களையும், பெற்றோரையும் வாட்டுகிறது. இளம் சமுதாயத்தினர் மத்தியில் விரக்தியை விளைவிக்கிறது. ஆனால் திறந்தவெளிப் பல்கலைக் கழகம் போன்ற ஒன்றின் மூலம் உயர்கல்வி பெற முன்வருவோர் எண்ணிக்கை குறைவு என்று அறியும்போது அது வியப்பைத் தருவதாக உள்ளது.

சாதாரண பல்கலைக்கழகத்தில் பெறும் உயர்கல்விக்கும் திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தில் பெறும் உயர்கல்விக்கும், பெறுமதி வித்தியாசம் இருப்பதாகக் கருதப்படுதல் திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தில் உள்ள கல்வி வசதிகள் குறித்துப் போதிய அறிமுகம், பிரசாரம் செய்யப்படாமை. பிரஸ்தாப பல்கலைக்கழக அனுமதி மற்றும் பாடநேரங்கள், சம்பந்தமான நிபந்தனைகள், கட்டுப்பாடுகள் அதில் சேர்வதற்கு பலருக்கும் ஏற்றவையாக இல்லாது இருந்தமை இப்பிரதேசத்தில் இதுவரை நிலவிய அசாதாரண, வழமையில்லா நிலை.

யாழ்ப்பாணப்பிரிவில் பல துறைகள் ஸ்தம்பித்துக் கிடப்பதற்கு மேற்சொன்ன நான்கு காரணங்களும் பின்னணியாக இருக்கலாம். ஆகையால் இங்குள்ள பிரிவை மூடிவிடும் முடிவுக்கு அவசரப்பட்டு வந்துவிடக்கூடாது.

வழமையான, அமைதியுடன் கூடிய வாழ்க்கை நிலை இப்போது மீண்டும் வந்துள்ளது. அது தவிர மாணவர் போதிய அளவில் விண்ணப்பிக்காமைக்கு ஏனைய மூன்றில் எது கூடுதல் பாதிப்பைத் தருகிறது என்பதை ஆய்ந்தறிந்து அதனை நிவர்த்தி செய்யவும், மாற்றம் செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காரியம், காரணம் இல்லாமல் இல்லை. திறந்தவெளிப் பல்கலைக்கழக யாழ். பிரிவு குறித்து ஆராய்வதற்கு இங்கு வருகை தரும் உபவேந்தரும், சம்பந்தப்பட்ட உள்ளூர் அதிகாரிகளும், மாணவர் அக்கறை காட்டாமை என்ற நோயை சரிவரக் குணங்குறி கண்டு, உரிய — சரியான — மருந்து கொடுக்க வேண்டும். அவசர முடிவு எதுவும் எடுத்துவிடலாகாது. — மருந்தை மாறிக் கொடுத்து நோயாளியைக் கொன்றுவிடலாகாது.

அதேபோல, கையிற் கிடைத்ததை கீழே வீசி உடைப்பதற்கு இடம் தராமல், அதனைத் தக்கவாறு பயன்படுத்துவதற்கு உயர்கல்வி வசதியை இழந்துபோன எம்மவர்களும் முன்வரவேண்டும்.

# நாற்சதுர சுவிசேஷ சபையின் 5 ஆவது தேசிய மாநாடு.

நுவரெலியா, ஏப் 5

இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை அதன் 5 ஆவது தேசிய மாநாட்டை எதிர்வரும் ஏப்ரல் 12 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை நுவரெலியாவில் அமைந்துள்ள பரி. யோவான் கல்லூரியில் நடத்தவிருக்கின்றது. இதில் கௌரவ விருந்தினராக சர்வதேச நாற்சதுர சுவிசேஷ சபையின் உபதலைவரும், வெளிநாட்டு ஊழியங்களின் பொறுப்பதிகாரியுமானகலாநிதி.றோய் உறிக்ஸ் ஜூனியர்,கலந்துகொள்வார். அவருடன் இணைந்து இங்கிலாந்து இராஜாவின் சபையைச் சேர்ந்த ஒரு குழுவினரும் தேவ செய்திகளை பகிர்ந்தளிப்பார்கள்.

இம் மாநாட்டின் ஆரம்பச் செய்தியை 12 ஆம் திகதி இரவு இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபையின் தலைவர் வண. லெஸ்லி கீகல் அவர்கள் வழங்குவார்கள்.

இலங்கை நாற்சதுர சபை 1979 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது 200 கிளைகளையும், 7000 க்கும் அதிகமான அங்கத்தவர்களையும் கொண்டதாக வளர்ந்துள்ளது.

இத்திகதிகளில் தினமும் மாலை 6 மணிக்கு பொது ஆராதனைகள் நடைபெறும். (க)

### நினைவில் இன்று

04- 04- 1990

- யோகர் சுவாமி குருபூசை

## சமய சந்நிதிகளில்

### அத்தியடி பிள்ளையார் திருவிழா

யாழ்ப்பாணம், ஏப் 5

யாழ். அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோவில் மகோற்சவம் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும். ஏப்ரல் 14 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 15 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

கோவில் பிரதம சிவாச்சாரியார் மறைவண்ணர் சிவஸ்ரீ மணிவண்ணக் குருக்களின் தலைமையில் மகோற்சவக் கிரியைகள் யாவும் நடைபெறும். (க)

### மகோற்சவம்

சுழிபுரம், ஏப் 5

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவில் மகோற்சவம் மார்ச் 29 ஆம் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. ஏப்ரல் 7 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 8 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். பூங்காவனம் 9 ஆம் திகதி நடைபெறும். (க 28)

★ ★ ★

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 14 ஆம் திகதி புதுவருடத்தினத்தன்று தேர்த்திருவிழாவும் 15 ஆம் திகதி காலை தீர்த்தோற்சவமும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு வசந்த உற்சவமும் நடைபெறும் பொன். சுந்தரலிங்கத்தின் சங்கீதக் கச்சேரியும் நடைபெறவுள்ளது. (க-5)

### வராஹி அம்மன் திருவிழா

கொக்குவில் மேற்கு அருள்மிகு ஸ்ரீ வராஹி அம்பாள் வருடாந்த மகோற்சவம் நாளை 5ம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 12ம் திகதி சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாவும் 14ம் திகதி (புதுவருடப்பிறப்பன்று) தேர்த் திருவிழாவும் 15ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

புதிய சித்திரத்தேர், திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலயம் உரிமையாளர் ஸ்தபதிதிரு, ஆ. ஜீவரத்தினத்தால் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. (க)

ஐ.நா. அகதிகள் ஸ்தானிகராலய

# அவசர வேலைத்திட்டம் பூர்த்தி; மே முதல் ஒழுங்கான திட்டங்கள்

யாழ்ப்பாணம் ஏப்ரல் 3

''ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலயத்தின் அவசர வேலைத் திட்டங்கள் இம் மாதத்துடன் பூர்த்தி அடையும். அடுத்த மாதம் முதல் திட்டமிடப்பட்ட ஒழுங்குசீர் செய்யப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்''

ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலய திட்டமிடல் அதிகாரி திரு. மொகமட் அசதுல்லா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிறுவனத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் நிறுத்தப்படுமா என்று அவரிடம் கேட்டபோதே அவர் இப்படித் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முதலில் மன்னார், வவுனியா ஆகிய அலுவலகங்களே மூடப்படும். அதைத் தொடர்ந்து யாழ்பாணம், திருமலை அலுவலகங்கள் மூடப்படும். ஆனால் அவை பற்றி இன்னும் எந்தவித முடிவும் செய்யப்படவில்லை.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3)

## நாணய மாற்று விகிதம்

03-4-1990

இலங்கை மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ரூபா | 231.72 | 232 68 |
| 100 | அமெரிக்க டொலர் | 3997.15 | 4002 80 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுன்ட் | 6520 01 | 6550.39 |
| 100 | ஜேர்மன் மார்க் | 2342.18 | 2359 81 |
| 100 | பிரெஞ்சு பிராங் | 692 79 | 705 61 |
| 100 | ஜப்பானிய யென் | 25.0305 | 25.2499 |

### தபாலகத்தில் கடமை நேரம் நீடிப்பு

யாழ்- மத்தியதபால் நிலையத்தில் கடமை நேரங்கள் நீடிக்கப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் 5-30 மணி தொடக்கம் 'இரவு ஏழு மணிவரை அங்கு கடமைகள் நடைபெற்று வந்தன.

தற்போது காலை 4 மணியில்இருந்து இரவு9மணி வரை கடமை நேரம் நீடிக்கப்பட்டுள்ளதாக பிரதம தபால் அதிபர் திரு. எஸ். பராராஜசிங்கம் உதயனுக்குத்தெரிவித்தார். [ஒ- 5-10]

## டாக்டர் சாமுவேல் ஹனிமன் 235 ஆவது பிறந்த நாள் விழா

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

ஹோமியோபதியின் தந்தை டாக்டர் சாமுவேல் ஹனிமன் அவர்களது 235ஆவது பிறந்த நாள் ஞாபகார்த்த விழா 8ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

டாக்டர் அ. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெறும்.இவ் விழாவில் யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட்,யாழ். மாநகர சபை சுகதார வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி. சு. கதிர்காமர், யாழ். லங்கா ஆயுர்வேதக்கல்லூரி அதிபர் டாக்டர்ப.றோமகேஸ்வரன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக்கலந்து கொள்வார்கள்.

விழாவில் டாக்டர் எஸ். மோசஸ்டாக்டர் ஹனிமனின் வாழ்க்கை வரலாறு பற்றி உரை நிகழ்த்துவார். வட இலங்கை அக்குபங்சர் தலைவர் டாக்டர் எஸ். ரி. புவிராஜன், திரு. ம. வேலுப்பிள்ளைஆகியோரும் உரை நிகழ்துவார்கள்.

டாக்டர் டி. ஏ.மத்தியூஸ், டாக்டர் எஸ். சிவனேசன் ஆகியோர் இந்த விழாவில் கௌரவிக்கப்பட உள்ளார்கள் (க.)

### 281 பேருக்கு காணி

காணிஅற்றோருக்கு காணி வழங்கும் ஜனாதிபதியின் திட்டத்தின் கீழ் புதுக்குடியிருப்பு உ. அ. அதிபர் திரு.அ.இராசரத்தினம் தேராவில் கிராமத்தில் 281 பேருக்குக்காணிகளை வழங்கினார்

யாழ். பல்கலைக்கழகத்தில்

## 2 புதிய பிரிவுகளை ஆரம்பிக்க பேராசிரியர்கள் இல்லையாம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 3

யாழ்- பல்கலைக்கழகவைத்திய பீடத்தில் புற்றுநோய், முறிவு-தறிவு ஆகிய இரு துறைகளை ஆரம்பிக்கபொது மக்கள் உதவி செய்தும் அத்துறைகளுத் தேவையான பேராசிரியர்கள் இல்லாததால் அந்த துறைகளை ஆரம்பிக்க முடியாதுள்ளதாம்.

வைத்திய பீடத்தில் புற்றுநோய் பிரிவை ஆரம்பிக்க மலேஷியாவில் உள்ள தமிழ் குடும்பம் ஒன்று நிதி வழங்கி இருந்தது.

அந்தப் பீடத்தில் முறிவு-தறிவுப்பிரிவை ஆரம்பிக்க சிங்கப்பூர் லீ பவுண்டேசன் நிறுவனம் நிதி வழங்கி இருந்தது.

இந்த இரு துறைகளையும் ஆரம்பிக்க பேராசிரியர்களைத் தெரிவு செய்ய விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதும் ஒரு விண்ணப்பமும் கிடைக்கவில்லை என்றும், அதனால் இந்த இரு துறைகளையும் ஆரம்பிக்க முடியாதுள்ளதாகவும் வைத்தியபீட அதிகாரி கவலை தெரிவித்தார்

நாட்டில் உள்ள மற்றைய பல்கலைக்கழங்களில் கூடஇல்லாத இந்ததுறைகளை ஆரம்பிக்க பல்கலைக்கழக ஆணைக்குழு அனுமதி வழங்கியும் பேராசிரியர் இல்லாததால் இந்த நிலை உருவாகியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

### வெளிவாரி பரீட்சை யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப் படிப்புக்களுக்கான பரீட்சைகள் யாழ் - பல்கலைக்கழகத்தில் ஆரம்பமாகின. 600 மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுகின்றார்கள்.

பரீட்சை 30 ஆம் திகதி வரை நடைபெறும்.

இதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து பேராசிரியர் எஸ். தில்லைநாதனும் விரிவுரையாளர் திரு. வீ. நந்தகுமாரனும் இங்கு வந்துள்ளனர். (ஒ-7)

வரவேற்பைப் பகிஷ்கரித்து

# தமிழக முதல்வர் கருணாநிதி நியாயமாக நடந்துள்ளார்

### ஊறணிக் கூட்டத்தில் உரை

காங்கேசன்துறை ஏப்ரல் 5

''இந்திய அமைதிப்படை சென்னைக்கு சென்ற சமயம் தமிழக முதல்வர் திரு. கருணாநிதி வரவேற்பு வைபவத்தில் கலந்து கொள்ளவில்லை. இலங்கையில் தமிழர்களைக் கொன்ற அமைதிப்படைக்கு வரவேற்பளிப்பது நியாயமில்லை என்பதை சரியாக உணர்ந்து அதற்கேற்ப நடந்து கொண்ட தமிழக முதல்வருக்கு எமது மக்கள் சார்பில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.''

ஊறணி புனித அந்தோனியார் ஆலய முன்றலில் இடம்பெற்ற அன்னை பூபதி நினைவு தினக் கூட்டத்தில் உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி உறுப்பினர் திரு. க. செல்வநாயகம் மேற் கண்டவாறு கூறினார்.

முன்னாள் தலைமை ஆசிரியர் திரு. பி. இராஜேந்திரம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது,

இன்று பேச்சு வார்த்தை மூலம் எமது பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிகள் நடைபெறுகின்றன. ஆனால் இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம் தமிழும் அரசகரும மொழி என கூறப்பட்ட போதும், மகா பொல பரிசு பெற்ற தமிழ் மாணவர்களுக்கு தனிச் சிங்களத்தில் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. குடிவரவு, குடியகல்வு திணைக்களத்திலிருந்து தமிழர் ஒருவருக்கு அனுப்பப்பட்ட கடிதம் தனி சிங்களத்தில் உள்ளது. இவ்வாறு பல விதங்களிலும் எமது மொழி உரிமை இன்னமும் உறுதிப்படாத நிலையில் உள்ளது.

ஆகவே பேச்சு வார்த்தை மூலம் சாதகமான நிலை உருவாகாது விட்டால் விடுதலைப் புலிகளுடன் மக்கள் அனைவரும் இணைந்து போராடத் தயாராக வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவைச் சேர்ந்த செல்வி அ. சித்ரா பேசுகையில் கூறியதாவது,

இலங்கை இராணுவத்தாலும் இந்திய இராணுவத்தாலும் தமிழ் பெண்கள் சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்து வந்துள்ளனர்.

(5ம் பக்கம் பார்க்க)

## நல்ல உள்ளம்




''நிச்சயமாக அல்லாஹ் உங்களின் தோற்றத்தையும், பொருட்களையும் நோக்குவதில்லை; ஆனால் உங்களின் உள்ளத்தையும் செயல்களையும் நோக்குகின்றான்'' என நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்.

மேலும் நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்:- ''நிறைந்த பொருட்கள் செல்வமன்று; ஆனால் நிறைந்த உள்ளமே செல்வம்''

மேலும் நபி (ஸல்) அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்:-

''எல்லாக் காரியங்களின் பிரதிபலனும் எண்ணங்களைப் பொறுத்தே இருக்கும்.''

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''உன் எண்ணம் எப்படி உள்ளதோ அப்படியே உன் பலனும் (கூலியும்) இருக்கும்.''

## வாசகர் திருமுகம்

### போதைப் பொருள் பாவனை

தற்போது வடபகுதியில் புதிய போதைப்பொருட்கள் தங்கு தடையின்றி பாவிக்கப்படுகின்றன. வட பகுதி இளைஞர்கள் வேலைக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும்போது போதைப் பொருட்களுக்கு பழக்கமாகின்றனர்.

சிலர் போதைப் பொருட்களுக்கு அடிமையாகின்றனர்: சிலர் அவற்றைக் கடத்துவதில் ஈடுபடுகின்றனர். இவர்கள் நாடு திரும்பி இங்குள்ளவர்களுக்கும் அவற்றை அறிமுகப்படுத்துகின்றனர். போதைப் பொருள் பாவனையால் பாதிக்கப்பட்ட இளைஞர்கள் சிலர் இன்று யாழ். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

இன்று வட மாகாணத்தில் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபடுபவர்கள் பிரபல வியாபாரிகளே. பாவனையாளர்களிலும் பார்க்க இவர்களுக்குத் தான் தண்டனை வழங்கவேண்டும். இவர்கள் உண்மையில் சமூக விரோதிகள் ஆவர்

ரவி செந்தில்நாதன்.
யாழ்ப்பாணம்.

### இருள் நீங்குமா?

கிளிநொச்சி திருநகர் ஜன நெருக்கடியான பகுதியாகும். நீண்ட காலமாக இப்பகுதி மின்சாரமோ, சுகாதார வசதிகளோ வழங்கப்படாது மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்து வருகிறது.

அருகில் உள்ள வைத்தியசாலைக் கழிவுகள் சுகாதார முறைப்படி அகற்றப்படாததால் நாளாந்தம் இப் பகுதியின்சூழல் மாசடைகிறது. எந்தபொதுஸ்தாபனமும் சுகாதார நிறுவனமும் இது விடயத்தில் அக்கறை எடுப்பதாக இல்லை.

அமைதியான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் தற்போதாவது மின்வசதியையும் சுகாதார வசதியையும் சம்பந்தப்பட்டவர்கள் பெற்றுத்தருவார்களா?

பி. சந்திரகுமார்.
கிளிநொச்சி.

### இருளின் மடியில் இடைக்காடு

எமது ஊராகிய இடைக்காடு 5 மாதகாலமாக இருளின் மடியில் இருக்கிறது. இடைக்காடு உப—மின்நிலையத்தின் சீரற்ற மின்விநியோகத்தை திருத்தும்படி நிலையத்துக்கும் நீர்வேலி பிரதேச சபைக்கும் பத்துக்கும் மேற்பட்ட கடிதங்களை எழுதினோம் இதுவரை எந்தப் பலனும் ஏற்படவில்லை. இது சட்டவிரோத மின்பாவனையால் ஏற்படும் தடை என்று கூறி வந்தனர். தற்போது சட்ட விரோத மின்பாவனை முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது. ஆனால் மின்விநியோகத்தில் எதுவிதமுன்னேற்றமும் ஏற்படவில்லை. இந்த நிலையைச் சீர்செய்ய சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா?

மு. கந்தசாமி,
அச்சுவேலி.

### தமிழ்த் தினப்போட்டி

வடமராட்சிக்கல்விக கோட்டக் கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த் தினப்போட்டி 9ஆம் திகதி இங்கட்கிழமை காலை 8 30 மணிக்கு வடஇந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகும். (க-118)

## கண்டதும் கேட்டதும்

ஆந்திர மாநிலத்தில் உள்ள பெரும் கோயில்களில் ஒன்று திருப்பதி.

பல கோடி ரூபா இக் கோயிலுக்கு வருடா வருடம் காணிக்கையாகக் கிடைக்கின்றது. இந்த வருமானத்தில் ஒரு சில பகுதிகள் இம்மாநிலத்தின் கல்விக்கும் கிடைக்கின்றது.

இதனால் வறுமைக் கோட்டில் அகப்பட்டு உழலும் ஏழைச் சிறார்களும் படித்து முன்னேறுவதற்கு திருப்பதி ஆண்டவன் உதவி கிடைக்கின்றது.

நமது நாட்டிலும் பல கோயில்கள் இருக்கின்றன. லட்சக்கணக்கான ரூபா இங்கு பக்தர்களால் வழங்கப்படாவிட்டாலும் ஆயிரக்கணக்கான ரூபாவாவது சில கோயில் உண்டியல்களில் சேருகின்றது என்பது வெளிப்படை.

எமது கோயில் நிர்வாகிகளும் தமக்குக் கிடைக்கும் வருவாயில் பத்தில் ஒரு பகுதியையாவது சமூக நலத்திட்டங்களுக்கு வழங்கும் காலம் எப்போது வரும்?

-செய்திலோலன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை உ. அ. அ. பிரிவு விளையாட்டுப் போட்டி முடிவு

யாழ்ப்பாணம் ஏப் 5

தெல்லிப்பழை உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி கடந்த 28, 29ஆம் திகதிகளில் நடைபெற்றது.

தெல்லிப்பழை உ. அ. அதிபர் தலைமையில் நடைபெற்ற இப்போட்டிகளில் காங்கேசன் சீமெந்து கூட்டுத் தாபனத்தின் நிர்வாக முகாமையாளர் திரு. வி. ரி. சிவலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். இப் போட்டிகளுக்கான ஏற்பாடுகளை தெல்லிப்பழை உ.அ அதிபர் பிரிவு விளையாட்டு உத்தியோகத்தர் திரு. றோஹான் இராஜசிங்கம் செய்திருந்தார்.

இப்போட்டிகளில் வெற்றி பெற்ற கழகங்களின் விபரம்;

எல்லே:- முதலிடம்- காங்கேசன்துறை யுனைட்டட் வி க., இரண்டாம் இடம்- யங்றோயல் வி. க காங்கேசன்துறை.

வலைப்பந்தாட்டம்:-

முதலிடம்- கிறாஸ் கொப்பேர்ஸ் வி. க. தெல்லிப்பழை

இரண்டாம் இடம்;- சென். அந்தனீஸ் வி. க ஊறணி

கைப்பந்தாட்டம்:-

முதலிடம்:- காங்கேசன்துறை யுனைட்டட் வி.க (A)

இரண்டாம் இடம்: காங்கேசன்துறை யுனைட்டட் வி. க. (B)

உதைபந்தாட்டம்:-

முதலிடம்: யங்றோயல் வி.க காங்கேசன்துறை.

இரண்டாம்இடம்-இளைஞர் வி. க. அளவெட்டி.

மெய்வல்லுனர் போட்டி:-

ஆண்கள்; முதலிடம்- கிறாஸ்ஹொப்பேர்ஸ் வி. க தெல்லிப்பழை

இரண்டாம்இடம்-இளைஞர் வி. க அளவெட்டி.

பெண்கள் முதலிடம்- கிறாஸ்ஹொப்பேர்ஸ் வி. க. தெல்லிப்பழை.

இரண்டாமிடம்- திருமகள் வி. க. தெல்லிப்பழையும் யுனைட்டட் வி. க. காங்கேசன்துறையும் பெற்றன.

(மு)

## விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

யாழ். ஆனைப்பந்தி மெதடிஸ்ட் மிஷன் பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி முதன் முறையாக இப்பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. ஆரம்பபாடசாலையான இப்பாடசாலையில் சிறுவர் சிறுமியர் கலந்து கொண்ட இப்போட்டியை பெற்றோர், பொதுமக்கள் பெருமளவில் கலந்து கண்டு ரசித்தனர். இப்போட்டியில் பாரதிஇல்லம் முதலிடத்தைப் பெற்றது.

கொத்தணி அதிபர் திருமதி நாகராசா பிரதம விருந்தினராக கலந்துகொண்டு வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்.

(க)

## சுகாதார நிலைய நடவடிக்கை

காங்கேசன்துறை ஏப்பிரல் 5

வீமன்காமம் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் பல்வேறு சுகாதார நல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

செஞ்சிலுவைச் சங்க உதவியுடன் அமைக்கப்பட்ட இந் நிலையத்தில் தாய் சேய் நலன் பேணுதல், நோய்த் தடுப்பு, சுகாதார அறிவுரைகள், சூழல் சுகாதாரம் பேணுதல் போன்ற சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த ஆரம்ப சுகாதார நிலையத்துடன் இணைந்தாற் போல மருத்துவமாது வதிவிடமும் அமைக்கப்பட்டுள்ளது.

(க-68)

## வேலணையில் மெய்வல்லுநர் போட்டி

வேலணை ஏப். 05

வேலணைகல்விக்கோட்டத்தால் நடாத்தப்படும் மெய்வல்லுநர் போட்டிஊர்காவற்றுறை புனித அந்தோனியர் கல்லூரி மைதானத்தில் வேலணை கோட்டக்கல்வி அதிகாரி திரு. புவேந்திரன் தலைமையில் 26 ஆம் 27 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளன.

(க-167)

### தண்ணீரூற்றுப் பகுதியில்

# சிதைந்துபோன கேணி, குளங்கள் புனரமைக்கப்பட வேண்டும்

## முல்லைத்தீவு அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம் ஏப்ரல் 5

''தண்ணீரூற்று ஊற்றங்கரை இயற்கை நீரூற்றுக் கேணியும் அதன் சுற்றாடலில் உள்ள நீரூற்றுக் குளங்களும் பாசன வாய்க்கால்களும் சிதைந்து போய் உள்ளன. இதன் காரணங்களைக் கண்டறிந்து அவற்றைப் புனரமைப்புச் செய்யவேண்டும்''

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் தண்ணீரூற்று ஊற்றங்கரை கிராமிய நீர்ப்பாசன புனரமைப்புத் திட்ட ஆலோசனைக் கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

தண்ணீரூற்று கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. வி. கந்தசாமி தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

அவர் மேலும் பேசியதாவது :-

''நீர் வளம் மனிதனுக்கு எல்லையற்ற வரப்பிரசாதமாகும். அதனை மக்கள் முறையாகப் பயன்படுத்த வேண்டும். விவசாயத்துக்குப் பயன்படும் இது போன்ற இயற்கை நீரூற்றுக்களை நாம் பேணுவதன் மூலம் எமக்குத் தேவையான நீரை சுலபமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

இப்படி அவர் கூறினார்.

அடுத்து முல்லைத்தீவு கமநல சேவைகள் உதவி ஆணையாளர் திரு. செ. பஞ்சலிங்கம் பேசுகையில் கமநல சேவைத் திணைக்களத்தின் கீழ் வரும் இந்நீரூற்றுக்களைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இத்திட்டத்தைப் பற்றி ஆராய்ந்து நடவடிக்கைகள்மேற்கொள்ள முன்வந்த அரசாங்க அதிபர் பாராட்டுக்குரியவர் என்றார்

கூட்டத்தில் இந்நீரூற்றுக்களை பற்றிய வரலாற்றினை விவசாயிகள் அரசாங்க அதிபருக்கு விளக்கமாக எடுத்துக் கூறினர்.

(இ-118)

## மக்கள் முகம்

### புதிய நிர்வாகிகள்

நல்லூர் ஸ்ரீ வாலையம்மன் ஆலய பரிபாலன சபையின் பொதுச்சபைக் கூட்டம், 5-02-1990 திகதியன்று 'நல்லூர் சமூக சேவை மன்றத்தில்'' நடைபெற்று பின் வருவோர் இவ்வாண்டிற்கான புதிய நிர்வாகிகளாக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்கள்

தலைவர்- திரு. க. இராசலிங்கம், செயலாளர் - திரு. ராஜா ராஜதுரை, பொருளாளர் - திரு. நா. சோமசுந்தரம் ஏனைய உறுப்பினர்கள்:, திரு. வ. பரமசிவம், திரு. தா. தனபாலசிங்கம், திரு.. ப. சிறிகந்தராசா, திரு. செ. பத்மகுமார், திரு சி. இரத்தினசபாபதி, திருமதி. லட்சுமிபதஞ்சலி, கணக்காய்வாளர் - திரு. ஆ. பொன்னுத்துரை.

### கடற் றொழிலாளர்கள்

# மீனவர் சங்க விதிகளுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும்

## புலிகள் பிரமுகர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

கடற்றொழிலாளர் தத்தமது சங்க விதிகளுக்கு கட்டுப்பட்டு தொழில் புரிய வேண்டும். ஒற்றுமையுடன் மற்றவரைப் பாதிக்காதவகையில் தொழில் செய்ய வேண்டும். தமிழ் ஈழத்தின் பொருளாதார வளத்தில் கடல் வளம் முக்கியமானது. அதனைப் பேணிப்பாதுகாத்துப் பயன்படுத்த வேண்டும்.

யாழ். மனோகராத் தியட்டரில் நடைபெற்ற கடற்றொழிலாளர் சங்கங்களின் கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகளின் வலிகாமப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் சாவக்காட்டுப்பகுதியில் மீன் பிடிக்கும் தொழிலாளர்களிடையே ஏற்பட்ட பிணக்கைத் தீர்ப்பதற்காக இந்த கலந்துரையாடல் ஏற்பாடாகியிருந்தது.

சுமார் நாற்பதுக்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின்பிரதிநிதிகள்கலந்து கொண்டு தத்தமது பகுதி பிரச்சினைகளைஎடுத்துக்கூறினர்.

கலந்துரையாடலில் கடற்றொழில் விரியாக்க உத்தியோகத்தர் திரு. எஸ். சச்சிதானந்தம், யாழ். மாவட்ட கடற் தொழிலாளர் அபிவிருத்தி சங்கத்தின் செயலாளர் திரு. எல். பி. பிலிப், வட்டுக்கோட்டை, கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் திரு. சே. சண்முகசுந்தரம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

(ஓ-5)


# அவுஸ்திரேலியா? கனடா?

தரம்மிகு பல்கலைக்கழக பட்டமொன்றைப் பெற உங்களைத் தயாராக்குங்கள்

Associate Degree in Computer Science — 2 Yrs.
ஒரு வருடத்திற்கு டொலர் 10,100

Bachelor of Computer Science (B. C. Sc) — 3 Yrs.
ஒரு வருடத்திற்கு டொலர் 15,000

Master of Computer Science (M. C. Sc) — 2 Yrs.
ஒரு வருடத்திற்கு டொலர் 6,000

&

Master of Business Administration (M. B. A) — 2 Yrs.
ஒரு வருடத்திற்கு டொலர் 6,000

வதிவிடச் செலவு டொலர் 4,800 வருடத்திற்கு.

நெறிகள் June / July 1990 இல் ஆரம்பம்

பி. வி. மூர்த்தி
253 2/1, காலி வீதி,
பம்பலப்பிட்டி, கொழும்பு - 4
(2ம் மாடி 'Pilgrim Ways' கட்டடம்)



சங்கானை
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.உ)
புதிய லொறிச் செசிக்கு பொடி அடிக்க

## கேள்வி விண்ணப்பம்

சங்கானை ப. நோ. கூ. சங்கத்திற்கு சொந்தமான புதிய 7 தொன் இசுசு லொறிச் செசிக்கு பொடி அடிப்பதற்கு பெயின்ற் வேலை செய்வதற்கும் கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. லொறிச் செசியை வேலை நாட்களில் சங்கத்தில் காலை 8 00 மணிமுதல் மாலை 5.00 மணி வரை பார்வையிடலாம்.

விண்ணப்பம் செய்வோர் சங்கத்தில் ரூபா 25/- செலுத்தி விண்ணப்பப் படிவம் பெற்றுக்கொள்ளலாம். அரக்கு முத்திரை இடப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபாலில் ''தலைவர், சங்கானை ப. நே. கூ. சங்கம், சங்கானை'' என விலாசமிடப்பட்டு கடித இடதுபக்க மேல் மூலையில் ''லொறி பொடி அடித்தல்'' என எழுதி 18 4. 90 பி. ப. 3.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
சங்கானை பல. நே. கூ. சங்கம்,
சங்கானை.

(C / 4423)



இலங்கை கத்தோலிக்க ஆயர் சங்கம் நடத்தும்

# தவக்காலக் கல்வித் திட்டங்கள்

1988 - மானிட உயிரின் மாண்பினை மதி அன்றேல் அழிவே எமது கதி
1989 - சமாதானத்தை நிலை நாட்ட நீதிக்காக உழைப்போம்
1990 சிந்தனை: நீதியைக் கடைப்பிடிப்போம் மானிட உயிரைப் பேணுவோம்

இவை சம்பந்தமான ★ குழு சிந்தனைகள் ★ கைநூல்கள் ★ சுவரொட்டிகளை
உங்கள் மறைம வட்ட சமூக முன்னேற்ற நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம். உங்கள் பங்கின் அல்லது சமூகத்தின் சிறு சிறு குழுக்கள் மத்தியில் மேற்கூறிய உதவி நூல்களைக்கொண்டு



- குழுத் தியானங்கள் / கலந்துரையாடல்கள்
- குழு நடவடிக்கைகளுக்கும் செபத்துக்கும் வழிகாட்டும் பொதுத் தீர்மானத்துக்கும் ஊக்கப்படுத்துங்கள்

இத் தவக் காலத்திட்டத்துக்கான உங்கள் பங்களிப்புக்கு எமது முழு ஒத்துழைப்பையும் வழங்குவோம்.

நாங்கள் உங்களுடன் தொடர்பு கொள்ள சிறுநூல்கள், துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், செய்தித்தாள்கள் ஆகியன மூலம் எமது சக்திக்குட்பட்டவரை முயற்சித்தோம்.

என்றாலும் இச் சிந்தனைகள் அனைத்து மக்களுக்கும் கொண்டு செல்லப்பட வேண்டும்.

எம் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படவும் இச் செய்தியை எடுத்துச் செல்லவும் நாம் சிறு குழுக்களாகக் கூடுவோம், 1990ஆம் ஆண்டுத் தவக்காலத் திட்டத்துக்கான உங்கள் விமர்சனங்களையும் கருத்துக்களையும் மதிக்கும் அதே வேளையில் 1991ஆம் ஆண்டுக்கான உங்கள் ஆலோசனைகளையும் கருத்துக்களையும் எதிர்பார்க்கின்றோம்.

இலங்கையில் இன்று நீதி அவசரத் தேவையாகும்—
சிறுபான்மை இனங்களின் குறைபாடுகளுக்கு, பெரும்பான்மையினரின் நியாயமான கோரிக்கைகளுக்கு நீதி ஏழைகள், தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள் ஆகியோருக்கு பொருளாதார நீதி ஆகியன அவசரத் தேவையாகும்.

# மானிட உயிரை அழிக்க எவருக்கும் உரிமை கிடையாது

பிதா யோண் கமிலஸ் பெர்ணாண்டோ,
இயக்குனர்,
சமூக பொருளாதார அபிவிருத்தி நிலையம்,
133, [illegible] வீதி, பொரளை,
கொழும்பு - 08.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்களும் பட்டதாரியாகலாம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாக பட்டதாரியாவதற்கு A/Lல் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட பயிலுனர் ஆசிரியர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான பதிவு செய்யும் விண்ணப்ப திகதி நீடிக்கப்பட்டுள்ளமையால் விண்ணப்பப் படிவங்களையும் விபரங்களையும் கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக் கொள்ளவும்.

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

[சி-4211]



## கப்பல் வேலை வாய்ப்புக்கள்

வெளிநாட்டுக் சப்பல்களில் பணிபுரிவதற்கு கீழ் வரும் தரத்தில் உள்ளவர்களும் மற்றும் ஆர்வமுள்ளவர்களும் தேவைப்படுகின்றனர்.

Deck Officer, Engine Officer,
Radio Officer, Cook, Stewards,
AB, Oiler, Deck Boys

★ எதிர் பார்க்கும் சம்பளத்தைக் குறிப்பிட்டு 7 நாட்களுக்கிடையில் விண்ணப்பங்களை அனுப்பவும்.

இல: 118, C/o உதயன்


## ஓராண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்:
11 - 09 - 1963

அன்னியர் அழிப்பில்:
17 - 03 - 1989

செல்வன்
**சிவகுரு சிவானந்தராஜன்**

ஒளிச்சுடர் அணைந்து ஆண்டொன்று கழிந்ததோ
ஓராண்டு சென்றிடினும் அழுகை ஓலம் ஓயவில்லை
உறக்கத்திலும் உன் நினைவு மாறவில்லை
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
இறைஞ்சுகின்றோம்

உன் பிரிவால் துயருறும்:
அம்மா, அப்பா, சகோதரர், அண்ணி,
பிள்ளைகள், உற்றார், உறவினர்.

மடத்தடி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி,
(3115)

விராட் விஷ்வப் பிரம்மனே நம

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
16 - 04 - 1941

உதிர்வு:
21 - 03 - 1986

அமரர்
**செல்லப்பா இரத்தினசபாபதி பத்தர்**

திதி: 05 - 04 - 1990

பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய், விளங்கிய நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து நான்கு ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு எம்மை விட்டு எம் உயிர் உள்ள வரை நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

441, இராமநாதபுரம்,
கிளிநொச்சி.
(3122)

# கஷ்டப் பிரதேசப் பாடசாலைகள்: அமைச்சு அறிக்கை கோருகிறது

## சிலவற்றின் நிலை மாறலாம்

கொழும்பு, மார்ச் 5

கஷ்டப் பிரதேச பாடசாலைகள் பற்றிய விபரங்களை ஆய்வு நடத்தி விரிவான அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி ஒவ்வொரு மாகாணக் கல்விப்பணிப்பாளருக்கும் பணிப்புரைகள் விடுவிக்கப்பட்டிருக்கின்றன.

சுமார் ஐந்து வருட காலத்துக்குப் பின்னர் திரட்டப்படவிருக்கும் முக்கிய தகவல் தொகுப்பாக இவை இருக்கும் என கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த அறிக்கைகளில் அவ்வப்பகுதி பாடசாலை ஆசிரியர்களின் எண்ணிக்கை, அவர்களின் சம்பள விபரங்கள், மாணவர்களின் எண்ணிக்கை, அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பல வழிகள் ஆகியவை உட்பட முக்கிய விடயங்கள் அடங்கியிருக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இந்த அறிக்கைகளின் அடிப்படையில் தற்போது கஷ்டப் பிரதேச பாடசாலைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பவற்றை தொடர்ந்தும் அதேமாதிரி கணிப்பீடு செய்வதா அல்லது –

அவற்றை சாதாரண வழியுள்ள பாடசாலைகளாகக் கணிப்பதா என்பது குறித்தும் –

புதிதாக எந்தப் பாடசாலைகளை கஷ்டப் பிரதேசத்துக்கு உட்பட்டவை என்று பிரகடனப்படுத்துவது என்பது குறித்தும் தீர்மானிக்கப்படும் என கல்வி அமைச்சின் உயரதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

## ஸ்ரீ வள்ளி இசை நாடகம்

யாழ்ப்பாணம் ஏப்ரல் 5

பாதிப்புற்ற சிறார்களுக்கான நிதிக்காக யாழ் பல்கலைக்கழக கலை வட்டத்தினரின் ஆதரவில் யாழ் நாடக மன்றத்தினர் அளிக்கும் 'ஸ்ரீ வள்ளி' இசை நாடகம் 7ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் கைலாசபதி கலை அரங்கில் மேடையேற்றபடவுள்ளது. (க-5)

## சீபாங் கார்ட்

காங்கேசன் துறை இலங்கை வங்கிக்கிளையிலும் சீபாங் கார்ட் விநியோக்கப்பட இருக்கிறது.

இந்தப்பகுதியில் உள்ள கடைச் சொந்தக்காரர்களும், வாடிக்கயாளர்களும் இந்த கார்ட்டைப் பெற விண்ணப்பங்களைக் கொடுத்துள்ளனர்.

## தமிழக---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகவே மகளிரும் எமது விடுதலைப் போராட்டத்தில் இணைந்து தமது தற்காப்புக்கு வழி காண வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

வீட்டுக்குள் அடைபட்டுக் கிடப்பதே மகளிர் வேலை என்றிருந்த நிலை மாறிவிட்டது

இப்படி அவர் கூறினார்.

வலிகாமம் பகுதி அரசியல் அமைப்பாளர் திரு. ஆஞ்சநேயர் பேசுகையில் கூறியதாவது,

இது வரை காலமும் எமது விடுதலைப் போராட்டத்தில் மக்கள் ஆற்றிய பங்கை நாம் குறைத்து மதிப்பிட முடியாது ஆனால் கோழைத்தனமான மக்கள் இன்னமும் நம் மத்தியில் வாழ்கிறார்கள். கோழைத்தனத்தை விட்டு சகலரும் எமது போராட்டத்தில் இணைய வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

மற்றும் திரு. ஏ வி. மாணிக்கம், திருமதி. கனக ரெட்ணம், உட்படப் பலர் பேசினர்.

(இ 68)


## ROWLANDS

றோலண்ட்ஸ்

**விநியோகஸ்தர்கள் தேவை**

**உஷா கிளசியோ**
**USHA GLACIO**

குளிர்சாதனப் பெட்டி, டீப் பிரீசர்ஸ், போத்தல் குளிரூட்டிகள், மண்எண்ணெய்யில் இயங்கும் குளிர்சாதனப் பெட்டி என்பவற்றைப் பின்வரும் பிரதான நகரங்களில் விநியோகிப்பதற்கு விநியோகஸ்தர்கள் தேவை.

★ சங்கானை
★ யாழ்ப்பாணம்
★ கிளிநொச்சி
★ பரந்தன்
★ மன்னார்
★ திருகோணமலை
★ வவுனியா

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

HOUSE OF R ROWLANDS

**Rowlands Ltd.,**
38, 40
Edward Lane,
Colombo - 3


T. P. 502609



## சிக்மா பம்ப்ஸ்



**CEYGMA PUMPS**



உங்கள் தேவைகளுக்கேற்ற
மின் மோட்டர்கள்
**ELECTRIC MOTOR PUMPS**
$\frac{1}{2}$ HP, 1HP, $1\frac{1}{2}$ HP

நீர் இறைக்கும் இயந்திரம்
ENGINE DRIVEN PUMPS

● இந்தியன் விலியர்ஸ் பொருத்தப்பட்டது
Indian Villiers MK 12

● இங்கிலன்ட் விலியர்ஸ் பொருத்தப்பட்டது
England Villiers C 12

இப்பொழுது கையிருப்பில் உண்டு.

உங்கள் தேவைகளுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்:

**UNITED AGRO ENGINEERING**

274/1, ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்.
(பெரியாஸ்பத்திரி முன்பாக)

தொழிற்சாலை:
நாவற்குழி - கைதடி.

(சி-4235)



## VACANCIES

Please Send Your Applications on or Before 16th April For The Following Posts.

1. Site Supervisors
2. Carpenters

(தச்சுத் தொழிலாளர் உடன் வரவும்)

**K. A. ENGINEERS,**
142, PALALY ROAD,
THIRUNELVELY,
JAFFNA.

(3131)



கலை வர்த்தகக் கல்லூரி
**C. C. A.**
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்தி அருகே)

**A/L 90**
கணக்கியல் (கம்பனி முடிவுக் கணக்குகள்)
**ஸ்ரீ**
இந்துநாகரீகம் (மீட்டல்வினா-விடை வகுப்பு)
**கிருஷ்ணா**

ஆரம்பம்: 07 - 04 - 90 சனி பி.ப. 2.00 (சி4237)



## விக்னா

**டியூசன் சென்ரர்**

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**O/L DAY CLASSES**
(Dec)
(8.30 — 1.30)

**ஆரம்பம்: 06-04-90**

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:

கணிதம்: — திரு. செல்வா
விஞ்ஞானம்: — திரு. J. R. சூரி
ஆங்கிலம்: — திரு. விஸ்வநாதன்
சமூகக்கல்வி } திரு. கருணாகரன்
வர்த்தகம் } திரு. கோபி
தமிழ் } திரு. சுந்தரலிங்கம்
சமயம் }

மு. குறிப்பு:
1. பயிற்சிப் பரீட்சைகள் ஒவ்வொரு வருடமும் இலவசமாக நடாத்தப் படும்.
2. கடமை, கட்டுப்பாட்டுடன் நடாத்தப்படும் ஒரே நிறுவனம்.
3. மாணவர்கள் முன் கூட்டியே பெயர்களை பதிவு செய்யவும்.
4. விடுதி வசதி செய்து கொடுக்கப் படும்.

[சி-4167]


## இரண்டாம் ஆண்டு நினைவு நாள்



அமரர்
**திரு. வ.வ. கயிலாசபிள்ளை**
(முன்னை நாள் கொக்குவில், கோண்டாவில் கிராம சபை உறுப்பினர்)

தோற்றம்:
18- 12 1922

மறைவு:
28-3-1988

எங்கள் அன்புத் தெய்வமே எங்களை விட்டு நீங்கள் சென்று இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. உங்கள் நினைவுகள் எங்களை விட்டு பிரியவில்லை.

தங்கள் பிரிவால் துயருறும்.
அன்புள்ள
மனைவி, பிள்ளைகள் பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

''கமலாம்பிகை பவனம்''
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.
(12269)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ லித்து ஏனியா பற்றி

# புஷ்- கோர்பச்சேவ் பேச்சு; அமெரிக்க அரசு நிராகரிப்பு

லித்து ஏனியாவில் சுதந்திரப்பிரகடனம் குறித்துஅமெரிக்கஜனாதிபதிஜோர்ஜ் புஷ் ஷூம் சோவியத்ஜனாதிபதி கோர்பச்சேவும் நேரடிப் பேச்சுக்களை நடத்த வேண்டும் என்று கோரிக்கையை அமெரிக்க அரசு நிராகரித்து விட்டது.

இந்த நேரடிப்பேச்சு பிரச்சினைக்குத் தீர்வு காணுவதை கடுமையாக்கி விடும் என்று அமெரிக்க அரசு மேலும்தெரிவித்தது. (எ)

# மண்டேலா - டிகிளேர்க் இன்று சந்திக்கின்றனர்!

கேப்டவுன், ஏப்ரல் 4

ஆபிரிக்கத் தேசியக் காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா நாளை வியாழக்கிழமை தென் ஆபிரிக்க ஜனாதிபதி டிகிளேர்க்குடன் பேச்சுக்கள் நடத்துவார்.

இதனை திரு. மண்டேலா நேற்றுச்செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

தென்ஆபிரிக்காவின் கறுப்பு இன மக்களிடையே மோதல்கள் ஏற்பட்டு வருகின்றன.

வெள்ளை அரசின் பொலீஸார் கறுப்பு இன மக்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்த போது பலர் கொல்லப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்துதென் ஆபிரிக்கா அரசுடன் பேச்சுக்கள் நடத்தப்போவது இல்லை என்று ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் முன்னர் அறிவித்திருந்தது. (எ)

# தேர்தல் மூலம் ஜனதா தள் தலைவர் தெரிவு இடம்பெறும்

புதுடில்லி, ஏப்ரல் 4

ஜனதாதள் கட்சியின் தலைமைப்பதவிக்கு தேர்தல் மூலம் ஒருவரை நியமிக்கும்படி பிரதமர் வி. பி. சிங் யோசனை கூறியிருக்கிறார்.

இரண்டு பதவிகளை ஒருவர் வகிக்கக்கூடாது என்று கூறி திரு. சிங் கட்சித்தலைமைப் பதவியை ராஜினமாச் செய்தது தெரிந்ததே.

இப்பதவி இன்னும் நிரப்பப்படாமல் உள்ளது. (எ)

# ஆயிரம் எம்பிக்கள் பங்குபற்றும் உலக நாடாளுமன்ற மாநாடு

நிக்கோஸியா, ஏப்ரல் 4

90 நாடுகளைச் சேர்ந்த சுமார் ஆயிரம் எம்பிக்கள் கலந்து கொள்ளும் சர்வதேச நாடாளுமன்ற சங்கத்தின் ஒருவார கால மாநாடு கடந்த (திங்கட்கிழமை) சைப்பிரஸ் தலைநகர் நிக்கோஸியாவில் ஆரம்பமானது.

போதைவஸ்துக் கடத்தலுக்கு எதிரான போராட்டத்தை தீவிரப்படுத்துவது குறித்து இம்மாநாட்டில் முக்கியமாக ஆராயப்படவுள்ளது.

தற்போது நடைபெறுவது சர்வதேச நாடாளுமன்றச் சங்கத்தின் 83 ஆவது வருடாந்த மாநாடாகும்.

கிழக்கு ஐரோப்பா, லத்தின் அமெரிக்கா, தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பற்றியும் இம்மாநாட்டில் ஆராயப்படும்.

# சுதந்திரப் பிரகடனத்தை ரத்து செய்ய லித்துஏனியா அரசு மறுப்பு

வில்னியஸ் ஏப்ரல் 4

சுதந்திரப் பிரகடனத்தை ரத்துச் செய்ய முடியாது என்று லித்துஏனிய ஜனாதிபதி லான்பேகிஸ் நேற்று அறிவித்தார்.

ஆனால் பேச்சுக்களை சோவியத் அதிபர் மிக்கெய்ல் கோர்பச்சேவுடன் நடத்தத் தயாராக இருப்பதாக லித்து ஏனிய அதிபர் மேலும் சொன்னார்.

இதனிடையில் - மேலும் ஒரு தொகுதி சோவியத் இராணுவம் லித்துஏனிய தலைநகர் வில்னியஸுக்குள் நுழைந்தது.

இதைத் தொடர்ந்து, லித்துஏனிய நாடாளுமன்றம் அவசரமாகக் கூடி நிலைமையைப் பரிசீலனை செய்தது.

இதனிடையில் —

ஒரு தலைப்பட்சச் சுதந்திரப் பிரகடனத்தை ரத்துச் செய்யும்படி லித்துஏனியாவுக்கு கோர்பச்சேவ் கடுமையான எச்சரிக்கை ஒன்றை விடுத்தார்.

சுதந்திரப் பிரகடனத்தை தொடர்ந்து வைத்திருப்பின் பாரதூரமான விளைவுகளை அது உருவாக்கும் என்று திரு. கோர்பச்சேவ் கூறியிருக்கிறார்

கோர்பச்சேவின் எச்சரிக்கையை விவாதிக்க லித்து ஏனியா நாடளுமன்றம் உடனடியாகக் கூடியது.

இதனிடையில், கோர்பச்சேவின் எச்சரிக்கையில் லித்து ஏனியா நாட்டுக்கு பயமுறுத்தல் விடுக்கப்பட்டு இருப்பதாக லித்துஏனிய ஜனாதிபதி பேர்கிஸ் தெரிவித்தார். (எ)

★ ஈராக்கின் எச்சரிக்கைக்கு மத்தியில்

# அரபு நாடுகளை வேவு பார்க்க இஸ்ரவேல் செய்மதி அனுப்பியது

## மத்திய கிழக்கில் பதற்றநிலை

ஜெருசலம், ஏப் 4

இரண்டாவது உளவுச்செய்மதியை இஸ்ரவேல் நேற்று விண்ணுக்கு அனுப்பியது.

அரபு நாடுகளில் இடம் பெற்றுவரும் அணுகுண்டுத் தயாரிப்பு வேலைகள் பற்றிய நடவடிக்கைகளைக் கண்காணிக்கவே இந்த உளவுச் செய்மதி அனுப்பப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

அணு ஆயுதங்களைத் தயாரிப்பதற்குத் தேவையான உபகரணங்களை களவாக இங்கிலாந்தில் இருந்து கடத்த முயன்ற ஈராக்கியர் ஒருவரை பிரிட்டிஷ் அதிகாரிகள் அண்மையில் கைது செய்தனர்.

அதன்பின்னரே இஸ்ரவேல் இந்த உளவுச் செய்மதியை விண்ணுக்கு அனுப்பியது.

இதனிடையில் — அணு ஆயுதத் தயாரிப்பில் இஸ்ரவேல் ஈடுபடுவது கண்டுபிடிக்கப்பட்டால் இஸ்ரவேலின் அரைப்பகுதியை அழித்து விடும் வல்லமை ஈராக்குக்கு இருப்பதாக ஈராக் ஜனாதிபதி சதாம் ஹூசேன் எச்சரிக்கை செய்திருக்கிறார்.

ஈராக்கிடம் தற்போது கையிருப்பில் உள்ள இரசாயன ஆயுதங்கள் இத்தாக்குதலுக்குப் போதும் என்றும் ஹுசேன் தெரிவித்தார்.

17 மாதங்களுக்கு முன்னர் இஸ்ரவேல் தனது முதலாவது உளவுச் செய்மதியை விண்ணுக்கு அனுப்பியது.

இஸ்ரவேல் இரண்டாவது உளவுச் செய்மதியை அனுப்பியதைத் தொடர்ந்து, மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் பதற்றநிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ)

# காபூல் மீது மீண்டும் தாக்குதல் தப்பி ஓடிய அமைச்சர் முஸ்தீபு

பெஷாவார், ஏப்ரல் 4

காபூல் அரசு மீது மீண்டும் இராணுவத் தாக்குதல் நடத்தப்போவதாக தோல்வியில் முடிந்த சதிப் புரட்சியின் தலைவரான முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஷாநவாஸ் டனாய் அறிவித்திருக்கிறார்.

டாக்டர் நஜிபுல்லா அரசில் பாதுகாப்பு அமைச்சர் பதவியை வகித்துக் கொண்டிருந்தபோது இவர் சதிப்புரட்சியை நடத்தினார்.

அது தோல்வியில் முடிவடையவே ஷாநவாஸ் தப்பி பாகிஸ்தான் சென்றார்.

கடந்த மாதம் 6 ஆம் திகதி நடந்த இச்சதிப் புரட்சியின் போது 200 பேர் வரையில் கொல்லப்பட்டனர். (எ)

## குழந்தைசாமி துணைவேந்தர்

சென்னை ஏப்ரல் 4

இந்திராகாந்தி தேசிய திறந்த பல்கலைக்கழகத் துணை வேந்தராக பேராசிரியர் வி. சி. குழந்தைசாமியை ஜனாதிபதி வெங்கட்ராமன் நியமித்தார்.

விஞ்ஞானியான திரு. குழந்தைசாமி தமிழ் இலக்கியத்திலும் அதிக ஈடுபாடு கொண்டவர். (எ)

## நாகிரெட்டிக்கு டாக்டர் பட்டம்

சென்னை ஏப்ரல் 4

பிரபல பட அதிபர் நாகிரெட்டிக்கு அனந்தப்பூரில் உள்ள ஸ்ரீகிருஷ்ண தேவராய பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

ஏற்கனவே திருப்பதி ஸ்ரீ வெங்கடேஸ்வர பல்கலைக்கழகம் நாகிரெட்டிக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கிஇருந்தது. (எ)

# பொற்கோயிலுக்கு மீண்டும் பிரதமர் சிங் செல்கிறார்

புதுடில்லி, ஏப். 4

பிரதமர் வி. பி. சிங் இம்மாதம் 13 ஆம் திகதி பஞ்சாப் பொற்கோவிலுக்கு மீண்டும் செல்லப் போவதாக அறிவித்திருக்கிறார்.

கடந்த நவம்பரில் பிரதமரான பின்னர் வி. பி. சிங் பொற்கோவிலுக்குச் செல்ல விருப்பது இரண்டாவது தடவையாகும்.

பஞ்சாப் பிரச்சினைக்கு தீர்வு காணும் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் பிரதமர் சிங் அன்று கலந்து கொள்வார்.

ஏப்ரல் 13ஆம் திகதி சீக்கியர்களின் வைசாகி பண்டிகை தினம் ஆகும். அன்று அமிர்தசரஸ் செல்லும் வி. பி. சிங் பொற்கோவிலுக்குச் செல்வார்.

அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் ஜுலியன் வாலபாக்கில் நடைபெறும். (எ)

★ அ. தி. மு. கவில்

# பூனைக்கு யார் மணி கட்டுவது? இப்படிக் கேட்கிறார் வீரப்பன்

பூனைக்கு யார் மணி கட்டுவது? இந்த நிலைமை தான் அ. தி. மு. கவில் இன்று நிலவுகிறது.

அ.தி.மு.க. துணைச் செயலாளர் திரு. இரா. வீரப்பன் முன் கண்டவாறு சொன்னார்.

மதுரையில் செய்தியாளருக்கு பேட்டியளித்த போது முன்னாள் அமைச்சரான திரு. வீரப்பன் மேலும் சொன்னதாவது;

வெற்றிக்குப் பாடுபடும் போது மற்றொரு பக்கம் தோல்விக்காகவும் முயற்சி நடக்கிறது. துரோகிகள் எதிர்க்கிறார்கள்.

பாண்டிச்சேரி தோல்விக்கு உயர் கட்சி விவகாரமும் ஒரு காரணம்.

அ.தி.மு கவுக்குச் சரியான வழிகாட்டுதல் வேண்டும். எங்கேயோ ஒரு சோர்வு காணப்படுகிறது.

யார் வழி காட்ட வேண்டுமோ, அவர்கள் வழிகாட்ட வேண்டும். நான் கூறுகிற கருத்துக்கள் யாருக்குப் (ஜெயலலிதா) போய்ச் சேர வேண்டுமோ அவர்களுக்குப் போய்ச் சேர்ந்தால் சரிதான்.

கட்சியில் வழிகாட்டுதல் இல்லாத நிலையில் நான் எப்படி தீவிரமாக அரசியலில் ஈடுபடுவது? இருட்டறையில் நிற்கின்றேன். வழி தெரியாமல் முட்டிக் கொள்வதா?

எப்போதும் நான் கருத்துக்களை வெளிப்படையாகவே சொல்வேன். எதையும் மறைத்துப் பேசமாட்டேன்.

பூனைக்கு யார் மணி கட்டுவது என்ற பிரச்சனை தான் அ. தி. மு. கவில் இன்று உள்ளது.

இப்படி இராம. வீரப்பன் சொன்னார். (எ)


புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி - யாழ்ப்பாணம்.

DAY CLASSES

A/L 90 மீட்டல் வகுப்பு

பகுதி II ஆரம்பம்: 04 - 04 - 1990 (10மணி)

அளவையியல் — கேசவன்

(சி/4214)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் விருந்தினர் விடுதியாகப் பயன்படுத்துவதற்காக வீடொன்றைக் குத்தகைக்குப் பெறுதல்

விருந்தினர் விடுதியாகப் பயன்படுத்துவதற்காக மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு வீடொன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குத் தேவைப்படுகின்றது. குத்தகைக்கு கொடுக்கப்படவுள்ள வீடு பின்வரும் தேவைகளைத் திருப்திப்படுத்தல் வேண்டும்.

1. பல்கலைக்கழகத்தில் திருநெல்வேலி வளாகத்திலிருந்து ஒரு கிலோமீற்றர் சுற்று வட்டாரத்துள் அமைந்திருத்தல் வேண்டும்.
2. தளப்பரப்பு 150 சதுர மீற்றருக்கு குறைவாக இருத்தலாகாது.
3. குறைந்த பட்சம் மூன்று படுக்கை அறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. வீட்டின் முன்பக்கம் வாகனங்கள் தங்கி நிற்குமிட வசதி, பூந்தோட்ட இடவசதி என்பனவற்றை உடையனவாய் இருத்தல் வேண்டும்.
5. கிணறு, மின்சாரம், குழாய் நீர் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
6. குத்தகைக் காலத்தின் போது சிறிய திருத்தங்களைச் செய்வதற்கான உரிமைகளைப் பல்கலைக்கழகம் கொண்டிருத்தல் வேண்டும்.

வீட்டைக் குத்தகைக்கு விட விரும்புவோர் செலுத்த வேண்டிய குத்தகைப் பணத்தின் அளவைக் கடிதத்தில் குறிப்பிட்டு 1990 - 04 - 20 ஆம் திகதிக்கு முன்னர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வீட்டைக் குத்தகைக்குவிடல்'' என எழுதப்படல் வேண்டும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.
03 - 04 - 1990

[சி-4420]


★ லண்டன்

★ கனடா

உடன் பயண ஒழுங்குகள் செய்யப்படும்
06 - 04 - 1990 திகதிக்கு முன்
சந்திக்கவும்.

முகவரி:

அ. தவச்செல்வம்
B. Sc. (Hons)

நெல்லியான் வீதி, சுழிபுரம்.

[சி-4221]


## மக்கள் வங்கி அடைவு மீளளித்தல் முல்லைத்திவு மாவட்டம்

### திருத்தம்

ஏற்கனவே அறிவித்ததன்படி 6-12-83 வரை முல்லைத்தீவுக் கிளையில் அடைவு வைத்து அவற்றை மீளப்பெறுவதற்காக 21-9-89 வரை பணம் செலுத்தியவர்கள் நகைகளை பின்வரும் திகதிகளில் காலை 8.30 மணி முதல் பி. ப. 1.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

| வழங்கும் திகதி | கிழமை |
|---|---|
| 04-04-90 | புதன்கிழமை |
| 05-04-90 | வியாழக்கிழமை |
| 06-04-90 | வெள்ளிக்கிழமை |

வழங்கும் நிலையம்: மாங்குளம் பொலிஸ் நிலையம்.

தவிர்க்க முடியாத காரணத்தினால் வழங்கும் ஸ்தானத்திற்கு ஏற்பட்ட மாறுதலுக்கு வருந்துகிறோம்.

பிராந்திய முகாமையாளர்

மக்கள் வங்கி,
வடபிராந்தியம்.

(C/4418)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபா கலைஞருக்கு 88 இல் எழுதிய கடிதம்

# தமிழ்நாடு சட்டசபையில் சமர்ப்பிப்பு

சென்னை ஏப்ரல் 5

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் 1988 ஆம் ஆண்டு தமக்கு எழுதிய கடிதத்தின் வாசகங்களை தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தமிழக சட்ட சபையில் அண்மையில் சமர்ப்பித்தார்.

சட்ட சபையில் கடந்த வெள்ளியன்று எழுதப்பட்ட ஒழுங்குப் பிரச்சனை ஒன்றுக்கு பதில் அளிக்கையிலேயே தமிழக முதல்வர் இவ்வாறு கடித வாசகங்களைச் சமர்ப்பித்தார்.

''இலங்கைக்கு அமைதிப் படை என்ற பெயரில் சென்ற இந்திய இராணுவம் அமைதிக்காக உழைக்கவில்லை. ஈழத்தில் ஆறாயிரம் தமிழர்கள் உயிரிழந்ததற்கு முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியே காரணம்'' என்று தமிழக முதல்வர் கூறியிருந்தது தொடர்பாகவே ஒழுங்குப் பிரச்சனை எழுப்பப்பட்டிருந்தது. அதற்குப் பதிலளித்துப் பேசுகையில் கலைஞர் கருணாநிதி கூறியதாவது :-

### திட்டவட்டமாக தெரிவிக்கிறேன்

இந்திய இராணுவத்தின்பால் எனக்கும் என்னைத் தலைவனாக ஏற்றுக் கொண்டிருக்கின்ற தி.மு.கழகத்திற்கும், தி.மு.கழக ஆட்சிக்கும் எந்த நேரத்திலும் மரியாதை மதிப்பு உண்டு என்பதை மீண்டும் ஒரு முறை நான் இங்கே திட்டவட்டமாக திண்ணமாக அறிவித்துக் கொள்கிறேன்.

பங்களாதேஷ் போராட்டம் நடைபெற்ற போது அப்போது நம்முடைய இந்திய இராணுவம் அங்கே சென்றது. பங்காளதேஷில் விடுதலைப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த முக்தி வாகினி போராளிகளுக்கு ஆதரவாகச் சென்று பாகிஸ்தான் வீரர்களோடு மோதி, அங்கே பங்களாதேஷ் உருவாக காரணமாக இருந்தது.

இன்னொரு நாட்டோடு மோதி அங்கே ஒரு விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்டிருந்தவர்களுக்கு உதவிய அந்த இராணுவத்தை இந்தியாவிலே எந்த மாநில அரசும் பாராட்டாத அளவிற்கு பாராட்டிய அரசு அன்றைய திராவிட முன்னேற்றக் கழக அரசு.

### யுத்த நிதி

அது மாத்திரமல்ல இந்தியாவிலேயே உள்ள எந்த மாநிலமும் அரசும் தராத அளவிற்கு யுத்த நிதியை அன்றைக்கு தமிழ்நாடு தான் அன்னை இந்திரா காந்தி அவர்களை அழைத்து அவர்களுடைய கை லே வழங்கியது அப்போது கூட நான் சொன்னேன் நீங்கள் பிறந்த மாநிலமான உத்தர பிரதேசத்தை விட நாங்கள் தான் அதிக யுத்த நிதி கொடுத்திருக்கின்றோம்.''

எனவே இதை வைத்துக் கொண்டு தி.மு.கழகம் அல்லது இந்த ஆட்சி தேச விரோதமானது என்று யாராவது சொல்ல முன் வருவார்களானால் தேச விரோதமான காரியங்கள் இந்த நாட்டிலே எத்தனை நடைபெற்றிருக்கின்றன. யார் யார் நடத்தியிருக்கின்றார்கள் என்பதை எல்லாம் என்னால் புள்ளி விபரத்தோடு சொல்ல முடியும்

### இந்திய ஒற்றுமை கருதி

தி.மு.கழக ஆட்சியைப் பொறுத்த வரையிலும் அல்லது கட்சி அமைப்பைப் பொறுத்த வரையிலும் நாம் இந்திய ஒருமைப்பாட்டை இறையாண்மையை ஏற்றுக் கொண்டவர்கள்.

### விருப்பத்தை பொறுத்தது

வரவேற்பு நிகழ்ச்சிக்கு நான் செல்லவில்லை என்ற காரணத்தால் அவர்களை மரியாதைக் குறைவாக நடத்தி விட்டேன் என்று கூறுவது தவறாகும். ஒரு நிகழ்ச்சிக்கு நான் செல்லவில்லை என்பதால் அவர்களை மரியாதைக் குறைவாக நடத்தி விட்டோம் என்று பொருளல்ல செல்வதும் செல்லாததும் நம்முடைய விருப்பத்தைப் பொறுத்தது.

அமைதிக்காக அனுப்பப்பட்டது இந்த ராணுவம் ஆனால் அமைதிக்காக இந்த ராணுவம் பாடுபட்டதா என்றால் இல்லை. இந்திய ராணுவம் இலங்கையிலே நடந்து கொண்டதைப் பற்றி பிரபாகரனே எனக்கு 88-ஆம் ஆண்டு எழுதிய கடிதத்திலே உள்ள வாசகங்களை இங்கே நான் நினைவுகூற விரும்புகிறேன்.

'' ஆட் தொகையிலும் ஆயுத பலத்திலும் எம்மைவிட நூறு மடங்கு வல்லமை உடைய மிகப் பெரிய ராணுவ அழுத்தத்தை நாம் ஈழத்திலே எதிர் கொண்டு நிற்கிறோம். ஒரு புறம் இந்திய ராணுவமும், மறுபுறம் சிங்களராணுவமும், இன்னொரு புறம்எமது சகோதர கூலிப்பட்டாளங்களுமாக பல புறத்திலிருந்தும் நாங்கள் வேட்டையாடப் படுகிறோம்.

### எங்களை பாதுகாக்க

நாங்கள் இந்த யுத்தத்தை விரும்பவில்லை. இது எங்களது விருப்பத்திற்கு மாறாக எம்மீது பலவந்தமாக திணிக்கப்பட்ட யுத்தம். தமிழீழ சுதந்திர எழுச்சியை முற்றாக நசுக்கிவிட வேண்டும் என்ற சிங்கள இனவாத ஆட்சியாளரின் நீண்டகால ஆசையை நிறைவேற்றி வைக்கவே இந்த யுத்தம் தொடுக்கப்பட்டுள்ளது. வேறு வழியின்றி எம்மைப் பாதுகாத்துக் கொள்ளவே நாம் இந்தப் போரில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

### ராஜீவுக்கு பலமுறை கடிதம்

இந்த யுத்தம்எம்மீது திணிக்கப்பட்ட காலத்திலிருந்தே நான் பாரதப் பிரதமருக்கு பல கடிதங்களை எழுதியிருக்கிறேன். சமாதானத்திற்கு நாங்கள் தயார். போர்நிறுத்தத்திற்கு நாங்கள் தயார். என்று நான் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் பல தடவை கோரியிருக்கிறேன். யுத்தத்தை நிறுத்தி விட்டு புலிகளோடு பேச்சுக்களை நடத்துமாறு தமிழீழ மக்களும் உலகத்தமிழ் மக்களும் கோரி வருகின்றார்கள்.

### கோரிக்கை நிராகரிப்பு

ஆனால் இந்திய அரசோ இந்த கோரிக்கைகளை எல்லாம் நிராகரித்து வருகிறது. சமாதானத்தை உருவாக்குவதற்குப் பதிலாக தினமும் பெருமளவில் படைகளைக் குவித்து யுத்தத்தை விஸ்தரித்து வருகின்றது விடுதலைப் புலிகளை கூண்டோடு அழித்துவிட வேண்டுமென்று இந்திய அரசு கங்கணம் கட்டி நிற்கும் இந்த ராணுவ வாதக் கொள்கையால் இந்தியாவின் நலனோ, ஈழத் தமிழரின் நலனோ பேணப்படப் போவதில்லை.

### நாங்கள் எதிரிகள் அல்ல

நாங்கள் இந்தியாவின் எதிரிகள் அல்லர். இந்தியாவின் வெளிவிவகாரக்கொள்கைக்கு விரோதமானவர்கள் அல்லர். நாங்கள் இந்தியாவின் நண்பர்கள் இன ரீதியாக, கலாச்சார ரீதியாக, வரலாற்று ரீதியாக பாரதத்தோடு பின்னிப் பிணைந்தவர்கள். இனப்படுகொலைக்கு ஆளாகி வந்த ஈழத்தமிழ் மக்களைப் பாதுகாத்து, அவர்களின் விடிவுக்காக உயிரைப் பணயம்வைத்து போராடி வந்ததைத் தவிர நாங்கள் இந்தியாவிற்கு எந்த துரோகத்தையும் செய்து விடவில்லை.

### அபாய யுத்தம்

நாங்கள் இந்தியாவின் உண்மையானவிரோதிகளுக்கு எதிராக உலக நாசகார சக்திகளுக்கு எதிராகவே போராடி வந்தோம். இதனை நன்கு உணர்ந்துதான் இந்திய அரசு எமது ஆயுதப் போராட்டத்திற்கு அன்று உதவி புரிந்து வந்தது. ஆனால் இன்று பழைய எதிரிகளை நண்பர்களாக்கி, உண்மையான நண்பர்களை பகைவர்களாகக் கருதி, இந்திய அரசு எம்மீது இந்த அபாயமானயுத்தத்தை தொடுத்து எம்மை அழித்து வருகிறது.

### ஒரே ஒரு பாதுகாப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்து விடுவதால் தமிழ் மக்களின் நலன்கள் எந்த வகையிலும் பேணப் படப்போவதில்லை. தமிழீழ மக்களின் ஒரேயொரு பாதுகாப்பு அரணாக இருந்து வந்த எம்மை ஒழித்துக் கட்டுவதால் எமது மக்களின் எதிர்காலம் பெரிய ஆபத்திற்கு ஆளாக்கப்படும் என்றே நாங்கள் கருதுகிறோம்.

இந்த வாசகங்களை ஒரு முறை எண்ணிப்பார்த்தால் ராஜீவ்காந்தி ஆட்சிக்காலத்திலே ராணுவம் எப்படி அங்கே இந்த உணர்வுகளை நசுக்குவதற்காக பணியாற்றியிருக்கின்றது என்பதை நாம் உணரமுடியும். அந்த உணர்வு என்னை ஆட்படுத்தியிருக்கின்ற காரணத்தினாலேதான் அந்த நிகழ்ச்சிக்கு நான் செல்ல இயலவில்லை.

### ராஜீவே காரணம்

எனவே அமைதிப்படை என்ற பெயரால் எங்குமே நிகழாத சம்பவம் 1800 இந்திய ராணுவ வீரர்கள் கொல்லப்படுவதும், 5000 தமிழர்கள் கொல்லப்படுவதும், இவைகளுக்கெல்லாம் காரணமாக முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி இருந்தார் அல்லவா? அந்த ராஜீவின் செயலைக் கண்டித்துத்தான் நான் அந்த விழாவிற்குச் செல்லவில்லை.

இவ்வாறு கருணாநிதி கூறினார்.

## 12 வயதுச் சிறுமி எழுதிய "சிறுகதைத் தொகுதி"!

12 வயது குழந்தை எழுத்தாளரின் புத்தகம் ஒன்றை அரச அச்சகக் கூட்டுத்தாபனம் வெளியிட்டிருக்கின்றது.

குழந்தைகளுக்கான 28 சிறுகதைகள் இந்த நூலில் உள்ளன.

சிங்கள மொழியிலான இச் சிறுகதைகளை லஸந்தி அபராஜிதா ஆரியதாஸா எழுதியிருக்கிறார்.

கூட்டுத்தாபனத்தின் புதிய வெளியீட்டுத் திட்டம் ஒன்றின் கீழ் இப்புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது என்று கூட்டுத்தாபனத் தலைவர் பந்துல குணசேகரா சொன்னார். (உ - எ)


JAFFNA ENGLISH ACADEMY

ENGLISH SHORT STORY / POETRY

Competitions

Open to only Sri Lankans UNDER 30 years. Contributions should be neatly and clearly typed, double - space, on one side of the paper only. Poems should not exceed one foolscap sheet, and short stories three. All entries should reach us on or before 31-4-1990. Send your contributions with your full name, address and the date of your birth to the Director of Studies, Jaffna English Academy, No. 9, Rakka Lane, Chundikuli, Jaffna. Even if the Author opts to use his / her initials or pseudonym, his/her name should be given. All works submitted should be original and unpublished, and are accepted on the basis that they will not be published in any journal or newspaper.

1st prize - Rs: 1000-00

2nd prize - Rs: 500-00

3rd prize - Rs: 250-00

There will be six prizes Altogether. Three for short stories and 3 for poetry. No correspondence regarding competitions will be entertained.

(C/4424)



Jaffna English Academy

9, Rakka Lane, Chundikuli, Jaffna.

★ TOEFL: Sat./Sun — 8 to 10 a.m. Mon. /Thurs. — 2 to 4 p.m.

★ ESOL: (English for Speakers of Other Languages) Wed./Fri. - 3 to 5 p.m. Sat./Sun. - 10 to 11.30 a.m.

★ SPOKEN ENGLISH: Mon./Wed: - 8.30 to 10.30 a.m. Sat./Sun: - 11.30 to 1.00 p.m.

New Batches just commenced.

Lectures: Kandiah Navarendran

[3134]



கலை வர்த்தகக் கல்லூரி

C. C. A.

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்தி அருகே)

A/L 90 மீட்டல், வினா - விடை வகுப்பு

DAY CLASSES

பிரிவு 04

| | | |
|---|---|---|
| வர்த்தகம் | 11.00 — | 12.00 |
| கணக்கியல் | 12.00 — | 1.00 |
| பொருளியல் | 1.00 — | 2.00 |

ஆரம்பம்: 09 - 04 - 1990

திங்கள் 11.00 .am

★ எமது வழமையான ஆசிரியர் குழு
★ வாரத்தில் ஐந்து நாட்களும் அனைத்துப் பாடங்களும் நடைபெறும்.
★ முழுப் பாடத்திட்டமும் முடிக்கப்படும்.
★ வினா - விடை வகுப்பு இலவசமாக நடைபெறும்.
★ 1980 - 89 வரையிலான 10 வருட பரீட்சை வினாக்களுக்கான விடைகள் கற்பிக்கப்படும்.
★ பிரிவு 1, 2, 3, என்பவற்றிற்கான அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.
★ பிரிவு 4 இற்கு குறிப்பிட்டளவு மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். 15 - 04 - 90 திகதிக்குப் பின்னர் பகல் நேர வகுப்புகளுக்கு அனுமதிகள் வழங்கப்படமாட்டாது.
★ பிரிவு 4 இற்குப் பின்னர் புதிய பிரிவுகள் எதுவும் ஆரம்பிக்கப்படமாட்டாது.

[சி-4239]


## வானொலி நிகழ்ச்சிகள்

5 - 4 - 1990

| | |
|---|---|
| 5.00 | நாதாஞ்சலி |
| 5.05 | தோத்திரமாலை |
| 5.30 | சாயி பஜன் |
| 5.45 | சைவ நற்சிந்தனை |
| 5.55 | பக்திப் பாடல் |
| 6.00 | வர்த்தக சேவை |
| 6.30 | செய்திகள் |
| 6.40 | செய்தித்தாள் கண்ணோட்டம் |
| 7.00 | வர்த்தக சேவை |
| 7.45 | மாகாணச் செய்திகள் |
| 7.50 | வர்த்தக சேவை |
| 8.00 | லயவிந்யாசம் |
| 8.15 | மெல்லிசைப் பாடல்கள் |
| 8.30 | சுவாரா மலாயூ மலாய் மஞ்சரி |
| 9.00 | வர்த்தக சேவை |
| 10.00 | இசையமுதம் |
| 10.30 | தவில் கச்சேரி |
| 10.45 | பக்திப் பாடல்கள் |
| 11.00 | வயலின் |
| 12.00 | வர்த்தக சேவை |
| 12.45 | செய்திகள் |
| 1.00 | வர்த்தக சேவை |
| 6.00 | செய்திகள் |
| 6.15 | இப்தார் விசேட முஸ்லிம் நிகழ்ச்சி |
| 6.30 | இந்து சமயப் பேச்சு |
| 6.45 | பாவளம் |
| 7.00 | முஸ்லிம் நிகழ்ச்சிகள் |
| 7.55 | உலகச் செய்திகள் |
| 8.00 | வளரும் பயிர் |
| 8.15 | கிராம சஞ்சிகை |
| 8.45 | மெல்லிசைப் பாடல்கள் |
| 9.00 | செய்திகள் |
| 9.20 | பக்திப் பாடல்கள் |
| 9.30 | கலந்துரையாடல் |
| 10.00 | இசைச் சோலை |
| 11.00 | ஒலிபரப்பு முடிவு. |

## பிரேமா--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்டவிழ்த்து விடப்பட்ட போது எமது சுயநிர்ணயஉரிமையைப் பெறுவதற்கான போராட்டம் ஆரம்பமானது. அடக்குமுறை ஒழியும்வரை எமது உரிமைப்போராட்டம் கைவிடப்பட மாட்டாது. அடக்குமுறை தொடர்ந்தால் சுயநிர்ணய உரிமையைப் பெறுவதற்கான போராட்டமும் தொடரும். ஆகவே தமிழீழக் கோரிக்கையை கைவிட்டு விட்டோமா என்ற கேள்வி எழத் தேவையில்லை

என்று திரு. பிரபாகரன் பதிலளித்ததாகக் கூறப்பட்டது.

''ஆயுதக் கையளிப்பு'' பற்றி கேட்கப்பட்டபோது—

''ஆயுதங்களை வைத்திருப்பதால் தான் எமது உரிமைகளைப் பேரம்பேசி நாம் பெறமுடிகிறது. ஆகவே உரிமைகள் கிடைக்கும்வரை ஆயுதங்கள் கைவிடப்படமாட்டாது'' என்று பிரபாகரன் சொன்னார். (உ)

## புனரமைப்பு--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கியமாக ஆராயப்பட்டது.

புனர்வாழ்வு வேலைகளைத் துரிதமாக மேற்கொள்ள தனியார் நிறுவனங்கள் உதவ வேண்டும் என்று அரச அதிபர் கோரிக்கை விடுத்தார்.

சர்வோதய நிறுவனம் 100 வீடுகளை அமைக்க இருப்பதாகத் தெரிவித்தது.

மற்றும் பல நிறுவனங்கள் முறைசாரக் கல்விப் பிரிவுக்கு [illegible] தன. (ஒ-9)

## இனப் பிரச்சினைக்கு---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்து முடிக்கப்படும்.

எமது தேசிய நலன்களையும் எமது சுயமரியாதையையும் பேணும் வகையில் எங்கள் வெளிநாட்டுக் கொள்கை அமையும், எமது இறைமையையும் சுதந்திரத்தையும் விட்டுக்கொடுக்கும் வகையில் நடந்து கொள்வதற்கு அரசாங்கம் தயாரில்லை.

இந்திய அமைதிப்படையை விலக்கிக்கொண்டதற்காக திரு. வி. பி. சிங் அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பயங்கரவாதத்தை முறியடிப்பதில் நாம் பெருமளவு வெற்றி கண்டுள்ள போதிலும் நாட்டின் சமூக அமைதியின்மைப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வுகள் காணப்பட வேண்டி உள்ளன.

அதன் காரணமாக இது வரை காலமும் தீர்க்கப்படாதுள்ள விவகாரங்களை ஆராய்ந்து தீர்வு காண எல்லாக் கட்சிகளோடும், குழுக்களோடும் மேற்கொள்ளப்படும் பேச்சுவார்த்தைகளைத் தொடரவேண்டியது முக்கியமாகும்.

கருத்து முரண்பாடுகளைக் கொண்டிருந்தவர்களும் சமூக அரசியல் நீரோட்டத்தில் சேர சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இப்பொழுது நிலைமைகள் சீரடைந்துள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் ஜனநாயக அரசியல் நீரோட்டத்துக்குத் திரும்பி இருக்கிறார்கள்.

1989 ஜனவரியில் நான் பதவி ஏற்றதன் பின்னர் நாட்டு நிலைமை அதி விரைவாகச் சீரடைந்தது.

அதன் ஓர் அங்கமாக தமிழீழ விடுதலைப் புலிகள் சனநாயக நீரோட்டத்தில் சேர இணக்கம் தெரிவித்தனர்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் போர் நிறுத்தம் செய்வதற்கு அவர்கள் இணங்கினார்கள் அதன் மூலம் நாடு முழுவதிலும் ஓர்அமைதி நிலைமையை உருவாக்க அவர்கள் உதவினார்கள்.

வடக்கு கிழக்கு பகுதிகளின் பிரச்சினைகள் மிகவும் சிக்கல் வாய்ந்தன. சம்பந்தப்பட்டவர்கள் யாவரும் திருப்தி அடையும் வகையில் அந்தப் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட வேண்டும் — என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

## காலமானார்

கொழும்பு, ஏப்ரல் 5

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் முன்னாள் பணிப்பாளர் திரு. ஈ. எஸ். பெர்னாண்டோ காலமானார்.

1960 ஆம் ஆண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இணைந்த இவர், செய்தி ஆசிரியராகவும், செய்திப் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

1983 ஆம் ஆண்டு மகாவலி ஒலிபரப்புச் சேவை அதிகாரியாகவும் கடமையாற்றியுள்ளார்.

1986 இல் தேசிய இணைப் பதிகாரியாக நியமிக்கப்பட்ட அவர் 1989 ஆம் ஆண்டு வரை அப்பதவியையும் வகித்தார். (ஓ - 6)

## மற்றொரு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளர் அறிவித்துள்ளார்.

இந்த நகைகளும் யாழ் பொலீஸ் நிலையத்தில் வைத்தே உரியவர்களுக்கு வழங்கப்படும்.

ஏற்கனவே குறிக்கப்பட்ட திகதிகளில் தமது நகைகளைப் பெறத்தவறிய சகல யாழ் மாவட்ட வாடிக்கையாளர்களுக்கும் இம்மாதம் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை மற்றும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட உள்ளது.

நகைகளைப் பெறாதவர்களுக்கு வங்கிக் கிளையினால் தனித்தனி கடிதங்கள் அனுப்பப்படுமென்றும் மேலதிக விபரங்களுக்கு வாடிக்கையாளர்கள் கிளை முகாமையாளருடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. [இ]

## அவசரகால..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாவும் வழமையான நிலைக்குத் திரும்பி வருவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது பொதுமக்கள் அச்சமின்றி தமது அன்றாட வேலைகளில் ஈடுபடுகின்றார்கள். அபிவிருத்தி வேலைகள் யாவும் மீண்டும் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. பொருளாதாரம் மீண்டும் வேகத்துடன் செயற்படத் தொடங்கியுள்ளது.

1995 ஆம் ஆண்டளவில் 10 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுவதற்கு இட்டமிடப் பட்டுள்ளது. அறிமுகப் படுத்தப்படவுள்ள பாரிய உற்பத்தி அபிவிருத்தி திட்டங்கள் மூலம் பல தொழில் வாய்ப்புகள் வழங்கப் படும். வெளி நாடுகளிலும் இலங்கையருக்கு கூடுதலான வேலை வாய்ப்புகள் கிடைக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் தோன்றுகின்றன.

அபிவிருத்தி நடவடிக்கைகளால் பெறப்படும் நன்மைகளை ஒரு குறிப்பிட்ட சிலரே பகிர்ந்து கொள்ளாமல் சகலருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும்— இவ்வாறு ஜனாதிபதி சொன்னார். (அ-க)

## சனியன்று இயங்கும்

யாழ்ப்பாணம், ஏப்5

தமிழ் - சிங்கள புத்தாண்டையொட்டி இலங்கை வங்கியின் சர்வதேசப் பிரிவு எதிர்வரும் ஏழாம்திகதி சனிக்கிழமை காலை ஒன்பது மணி முதல் ஒருமணிவரை செயல்படுமென்று பிராந்திய முகாமையாளர் திரு. எஸ். கணேசமூர்த்தி தெரிவித்தார்.

வெளிநாட்டு டிராப்புகள் மாற்ற வசதியாக இந்தப் பிரிவு இயங்குமெனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## ஜனசக்தி திட்டம்

முல்லைத்தீவு, ஏப் 05

முல்லைத்தீவு உ. அ.அதிபர் பிரிவில் சனசக்தி வேலைத் திட்டங்கள் வெற்றிகரமாக நடைபெற்று வருவதாக முல்லை உ, அ' அதிபர் திரு. வே. கந்தசாமி கூறினார்.

மேலும் அவர் கூறுகையில் சகல சனசக்திக் குழுக்களும் சனசக்திப் பெறுவோரும் ஜனாதிபதியின் திட்டத்துக்குப் பூரணஒத்துழைப்பு வழங்குவது பாராட்டத்தக்கது என்றார். (க-92)

## சுவாமி சாந்தானந்தா ஜெயந்தி தினவிழா

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

சுவாமி சாந்தானந்தாவின் ஜெயந்தி தின விழாவும் இராமகிருஷ்ணாலய நுண்கலைக் கல்லூரியின் 2 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் 7 ஆம் திகதி சனிக்கிழமை திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் உள்ள இராமகிருஷ்ணாலயத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி விழாவில் ஆராதனைகளும் இசை நிகழ்ச்சிகளும் நடைறெவிருக்கின்றன. சுவாமி சாந்தானந்தா ஜெயந்தி 1990 கலைஞர்களை கௌரவித்து நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார். (க - 5)

## சுதந்திர---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர்களும் பங்குபற்றினார்கள்.

இரண்டாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடரை நாடாளுமன்றத்தில் நேற்றுக்காலை 9-50மணிக்கு ஜனாதிபதிதிரு. ஆர். பிரேமதாசா ஆரம்பித்து வைத்தார்.

முதலில் ஜனாதிபதி அங்கு போய்ச் சேர்ந்ததும் சபாநாயகர் எம். எச். முகம்மது நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் ஆகியோர் நாடாளுமன்றக் கட்டட வாயிலில் வைத்து அவரை வரவேற்றார்கள். [அ-க]

## நகைமுகனை - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றியபோது ''சீக்கியர்களின் போராட்டத்துக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் ஆதரவு வழங்குவதாகவும் அவர்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க புலிகளும் போராடுவர்'' என நகைமுகன் கூறியிருந்தார். அதை அடுத்தே அவர் கைதானார்.

புதுடில்லியில் கைதான நகைமுகன் சென்னைக்குக் கொண்டுவரப்பட்டு 15 நாட்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

நகைமுகன் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் அல்லர் என்றும் அவருக்கும் இயக்கத்துக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் விடுதலைப் புலிகள் அறிவித்திருந்தது தெரிந்ததே. (ஒ-9)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

NESON'S
FUNERAL UNDERTAKERS
FLORIST
CASKET EMBALMING
FUNERAL COACHES
No: 563, HOSPITAL ROAD,
VEMBADI JUNCTION JAFFNA.

# உதயன்

05 - 04 - 1990 வியாழக்கிழமை

அந்தியகால சேவைக்கு உங்கள் அருகிலேயே
இருக்கும் அன்பன்
"நேசன்ஸ்"
★ பிரேதப் பெட்டிகள்
★ ஊர்வல வாகனம்
★ மலர் வளையங்கள்
★ எம்பாமிங்
★ நேசன்ஸ் ★
(வேம்படிச் சந்தி)
563, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### திருமலையில் புத்தாண்டு தினத்தன்று

## இராணுவ கலை நிகழ்ச்சிகளுக்கு விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு!

கொழும்பு, ஏப்ரல் 5

எதிர்வரும் ஞாயிறு மாலை திருகோணமலையில் இலங்கை இராணுவத்தால் நடத்தப்படவுள்ள கலாசார இசைநிகழ்ச்சிகளை நடத்துவதற்கான பாதுகாப்பை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வழங்கும்.

திருகோணமலைப் பொலீஸாரின் வேண்டுகோளைத் தொடர்ந்து பாதுகாப்பு வழங்க தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஒப்புக்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிங்கள புத்தாண்டை ஒட்டி இந்த கலாசார இசை நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

இதுசம்பந்தமான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக மாநாடு ஒன்று கடந்த திங்கட்கிழமை பொலீஸ் அதிபர் சந்திரா பெரேரா தலைமையில் நடந்தது.

வடக்கு- கிழக்கு பிரதிப் பொலீஸ் மா அதிபர் திரு. ரி. ஆனந்தராஜாவின் வேண்டுகோளின் பேரில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் திருமலை மாவட்ட அரசியல் பிரிவுத் தலைவர் திரு. ரூபனும் இம் மாநாட்டில் கலந்து கொண்டார்.

விடுதலைப்புலிகளின் இராணுவப் போராளிகள் தேவையான தரைப் பாதுகாப்பை வழங்குவர் என்றும் சிவில் உடையில் பொலீஸார் மேடைக்கு அருகில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவர் என்றும் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

மாவட்டத்தில் உள்ள சாராயத் தவறணைகள் மதுபான விடுதிகள் ஞாயிற்றுக்கிழமை மூடப்படும் என்றும்- மதுபான விற்பனை அன்று தடை செய்யப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கை இராணுவம் நடத்தும் இந்நிகழ்ச்சிக்கு பாதுகாப்பு உதவி வழங்க முன் வந்ததற்காக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு பொலீஸ் அதிபர் சந்திரா பெரேரா மாநாட்டில் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

ஞாயிறு நடைபெறும். கலாசார நிகழ்ச்சிகளில் கொழும்பில் இருந்து பல முக்கியஸ்தர்கள் கலந்து கொள்வர் என்று நிகழ்ச்சி அமைப்பாளர்கள் தெரிவித்தனர். (உ-எ)

### ரூபா இரண்டாயிரம்:

## ஸ்ரான்லி வீதிக் கிளையில் மீளக்குடியமர்தல் நிவாரணம்

யாழ்ப்பாணம், ஏப்.5

மீளக்குடியமர்தல் நிவாரணம் 454 குடும்பங்களுக்கு இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையில் எதிர்வரும் ஒன்பதாம் திகதி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிவாரணத்தைப் பெற தகுதியுடையவர்கள், தமது கிராம சேவையாளர்களுடன் தொடர்புகொண்டு கொடுப்பனவு வழங்கப்பட இருக்கும் குடும்பங்களின் பெயர்ப் பட்டியலில் தமது பெயர்கள் ஊர்ஜிதப்படுத்திய பின்னர் வங்கிக்கு வருமாறு வங்கி முகாமையாளர் திரு. செ. சம்பந்தநாதன் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

இந்தக் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் மீளக்குடியமர்தல் நிவாரணத்தின் இரண்டு கட்டக் கொடுப்பனவுகளையும் ஒன்றாகச் சேர்த்து ரூபா 2 ஆயிரம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் நிவாரணம் பெற இருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை வருமாறு:

கொழும்புத்துறை (J35)-32
அத்தியடி (J.37) -20
சுண்டுக்குழி (J.38) - 22
குருநகர் மேற்கு (J.39) - 32
குருநகர்கிழக்கு (J.40) - 32
யாழ்-நகரம் (J.41) - 26
பெரியகடை (J.42) - 9
கொட்டடி (J.43) - 19
நாவாந்துறை (J.44) - 14
சோனகதெரு (J.45) - 26
அரியாலைகிழக்கு (J.46) -1
அரியாலைமேற்கு(J.47)-36
அரியாலைமத்தி (J.48)-22
வண்.வட-கிழக்கு (J50)-18
கந்தர்மடம் (J.51)-13
நல்லூர் வடக்கு (J.52)-4
நல்லூர் தெற்கு (J.53)-123
கோண்டாவில் மேற்கு (J.54)-22.
கோண்டாவில் கிழக்கு (J.57) - 47
கொக்குவில் கிழக்கு (J.58) - 4
கொக்குவில் மேற்கு (J.59)-24. (உ-3)

## கெயர் அதிகாரிகள் யாழ்ப்பாணம் விஜயம்

யாழ்ப்பாணம், ஏப் 5

சர்வதேச கெயர் அமைப்பைச் சேர்ந்த இரு அதிகாரிகள் யாழ். மாவட்டத்தில் பல அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிட்டனர்.

''கெயர் இன்ரநஷனல்'' அமைப்பைச் சேர்ந்த பணிப்பாளர் திரு. கெவின் ஹென்ரி, விரிவாக்கப் பணிப்பாளர் செல்வி மெட்டி ஸ்ரோன் ஆகியோர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

கெயரின் யாழ். கிளை பணிமனையில் நடைபெற்ற தொழில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு உபகரணங்கள் வழங்கும் வைபவத்தில் இவர்கள் கலந்து கொண்டனர். இவ்வைபவத்தில் யாழ் அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் கலந்து கொண்டு தொழிற் பயிற்சியை ஆரம்பித்து வைத்தார்.

இந்த அதிகாரிகள் ஊர்காவற்றுறை எமிலியன் நிறுவனத்துக்கும் கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரிக்கும் நேற்று விஜயம் செய்தனர். (உ-3)

## லதா மங்கேஸ்காருக்கு 'தாதா பால்சாகிப்' விருது!

### மனோரமா சிறந்த துணை நடிகை

புதுடில்லி, ஏப் 5

இந்திய திரைப்படத் துறையில் மிகச் சிறந்த விருதான ''தாதா பால்சாகிப்'' விருது பிரபல பின்னணிப் பாடகி லதாமங்கேஸ்காருக்குகிடைத்துள்ளது.

1989 ஆம் ஆண்டு தேசியத் திரைப்பட விருதுகள் நேற்று அறிவிக்கப்பட்டன.

லதா மங்கேஸ்காருக்கு ஒரு லட்சம்ரூபாயும் சான்றிதழும் சால்வை ஒன்றும் அளிக்கப்படும்.

ஜனாதிபதி வெங்கட்ராமன் அடுத்த மாதம் 7 ஆம் திகதி புதுடில்லியில் விருதுகளை வழங்குவார்.

மிகச் சிறந்த நடிகர் விருது மலையாள நடிகர் மம்முட்டிக்கும் மிகச் சிறந்த துணை நடிகைக்கான விருது மனோரமாவுக்கும் கிடைத்துள்ளது.

புதிய பாதை என்ற தமிழ்ப் படத்தில் மனோரமா சிறப்பாக நடித்ததற்காக இவ் விருது வழங்கப்படுகிறது. (ஒ-எ)

## மீண்டும் இலங்கை வங்கியில் யாழ். செயலக கருமபீடம்

### இன்று முதல் செயற்படும்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

மீளக்குடியமர்தல் நிவாரணக் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக, இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதிக் கிளையில் முன்னர் இயங்கி வந்த யாழ் செயலக கருமபீடம் மீண்டும் இன்று முதல் செயற்படும்.

கடந்த ஞாயிற்றுக்கிழமையுடன் மூடப்பட்ட இந்த கருமபீடம், மீண்டும் இன்று முதல் இயங்கும் என்று செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இன்று மாதகல் கிழக்கு, பெரியவிளான் கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தோருக்கும் —

நாளை வெள்ளிக்கிழமை மாதகல் கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தோருக்கும் —

மறுநாள் சனிக்கிழமை பண்டத்தரிப்பு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தோருக்கும் நிவாரணம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## இன்றைய கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

இனக்குழும வன்செயல்களால் பாதிப்புற்று விதவைகளாக்கப்பட்டோர் பற்றிய கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராக டயகோன்யா நிறுவன வதிவிட பிரதிநிதி திருமதி செரின் பேர்சன் கலந்து கொள்கிறார். (க-5)

## சுகாதார தினம் சனியன்று

கொழும்பு, ஏப்ரல் 5

உலக சுகாதார தினம் நாளை மறுதினம் சனிக்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதுசம்பந்தமான நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்யும்படி பிராந்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (ஒ-எ)

## இஸ்ரவேல் தொடர்பு துண்டிப்பு; கடற்படைக்கு அதிக பாதிப்பு

கொழும்பு, ஏப்ரல் 5

இஸ்ரவேலுடனான ராஜரீக தொடர்பு துண்டிக்கப்படுவதால் இலங்கைக்கடற்படையின் நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்படும் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இஸ்ரவேலியத் தயாரிப்புக்களான பீரங்கிப் படகுகளை இலங்கைக் கடற்படை பாவித்து வருகின்றது.

இலங்கை அரசின் நடவடிக்கைக்குப் பதிலாக இஸ்ரவேல், இந்தப் பீரங்கிப் படகுகளுக்கான உதிரிப்பாகங்கள் வழங்குவதை நிறுத்திக்கொண்டால் அவற்றைத்தொடர்ந்து சேவைக்குவிடமுடியாத நிலை ஏற்படும் என்று பாதுகாப்பு வல்லுநர்கள் கூறுகின்றனர்.

இலங்கைக் கடற்படை 12 இற்கும் அதிகமான இஸ்ரவேலிய டுவோரா (Dvora) ரக பீரங்கிப் படகுகளைப் பாவித்து வருகிறது.

ஒவ்வொரு பீரங்கிப் படகும் 5 கோடி 20லட்சம் ரூபா பெறுமதியானவையாகும். (உ-எ)

### கை விசேஷத்துக்காக

## புத்தாண்டு தினத்தன்று இலங்கை வங்கி திறப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

முதல் தடவையாக புதுவருட கைவிசேட வியாபாரத்துக்காக இம்முறை இலங்கை வங்கியும் ஏப்ரல் 14ஆம் திகதி புத்தாண்டு தினத்தன்று திறக்கவிருக்கிறது.

அன்று காலை 8.30 மணிக்கு வங்கிகள் திறக்கப்பட்டு 10.30 மணிக்கு மூடப்படும்.

சேமிப்புச் சான்றிதழ் வழங்கும் வேலைகள் மட்டும் அன்று நடைபெறும்.

சேமிப்புச் சான்றிதழ் பெறுபவர்களுக்கு ஐந்து ரூபா புது நாணயம் கைவிசேடமாக வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-3-69)

## வவுனியா கல்விக் கல்லூரி கட்டட வேலை தாமதமாகும்

யாழ்ப்பாணம், ஏப் 5

வவுனியாவில் அமைக்கப்பட இருந்த கல்விக்கல்லூரி கட்டட வேலைகள் மேலும் இரு மாதங்கள்தாமதமாகவே ஆரம்பிக்க வேண்டியுள்ளதாக அறியவந்தது.

இந்தக்கட்டடவேலைகளை 30 மில்லியன் ரூபா செலவில் அமைக்க கல்வித்திணைக்களத்தால் கொந்தராத்துக்காரரிடம் இருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டிருந்தன.

ஆனால் கிடைத்த இரண்டு கேள்விகளிலும் இந்த தொகையை விட கூடுதல் பணம் கோரப்பட்டதால் மீண்டும் திணைக்கள அனுமதி பெற்றே கேள்விகள் கோரப்பட இருக்கின்றன.

இதனால் மேலும் இரு மாதங்களுக்கு மேல்தான் கட்டட வேலைகள் ஆரம்பிக்க முடியும் என்று சம்பந்தப்பட்டவர்கள் தெரிவித்தனர். (ஒ-3)

### இலங்கைவங்கி

## ஸ்ரான்லி வீதிக்கிளையில் 9 ஆம் திகதி கொடுப்பனவுகள்

### தவறியோருக்கு இறுதிச் சந்தர்ப்பம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

கீழ் வரும் கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கு 9 ஆம் திகதி திங்கட்கிழமையாழ் ஸ்ரான்லி வீதி இலங்கைவங்கிக் கிளையில் மீளக்குடியமர்வு 2 ஆம் கட்ட நிவாரணக் கொடுப்பனவு ரூபா 1000 வழங்கப்படவுள்ளது.

ஏற்கனவே மீளக் குடியமர்வு நிவாரணத்தை பெற வங்கியில் பெயர் குறிப்பிடப்பட்டு எடுக்கத் தவறியவர்களுக்கும் இறுதிச் சந்தர்ப்பமாக அன்றையநாள் நிவாரணம் வழங்கப்படவுள்ளதாக ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கி முகாமையாளர் திரு. செல்லப்பா சம்பந்தநாதன் தெரிவித்துள்ளார்.

நிவாரணம் வழங்கப்படவுள்ள கிராம சேவையாளர் பிரிவுகள்:—

★ J/46 - அரியாலை கிழக்கு.
★ J/47 - அரியாலை மேற்கு.
★ J/48 - அரியாலை மத்தி.
★ J/49 - வண் - வட மேற்கு.
★ J/50 - வண் - வட கிழக்கு
★ J/51 - கந்தர்மடம்.
★ J/52 - நல்லூர் வடக்கு.
★ J/53 - நல்லூர் தெற்கு.
★ J/54 - திருநெல்வேலி மேற்கு.
★ J/55 - திருநெல்வேலி கிழக்கு.
★ J/56 - கோண்டாவில் மேற்கு.
★ J/57 - கோண்டாவில் கிழக்கு.
★ J/58 - கொக்குவில் கிழக்கு.
★ J/60 - கொக்குவில் மத்தி. (இ-3-6)

## மருதடியில்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய உற்சவத்தை யொட்டி அங்கு இலங்கை வங்கியின் விசேட கருமபீடம் செயற்பட்டு வருகிறது.

இன்றைய கருமபீட செயற்பாடுகளை வர்த்தகர் எஸ். சிவகுமார் மங்கள விளக்கேற்றி [illegible] பார். (இ-5)

## தமிழகத்திற்கு விஜயம் செய்யும் திட்டம் பிரபாவிற்கு இல்லை!

### சென்னைச் செய்திகளுக்கு புலிகள் மறுப்பு

சென்னை, ஏப்ரல் 5

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் திரு. வே. பிரபாகரன் தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்யும் திட்டம் எதுவும் இல்லை.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி விடுத்த அறிக்கையில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

மார்ச் 30, 31 ஆகிய திகதிகளில் சென்னையில் சில பத்திரிகைகளில் விடுதலைப்புலிகள் தலைவர் திரு. பிரபாகரன்— அகாலிதளத்தலைவர் மான் சந்திப்பு என்ற தலைப்பில் வெளியாகிய செய்திகளை மறுத்து இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

மார்ச் 31 ஆம் திகதி தினமணிப்பத்திரிகையில் புதுடில்லியில் நடந்த அகாலிதள கூட்டத்தில் விடுதலைப் புலிகள் சார்பில் நகைமுகன் என்பவர் அகாலிதளத்துக்கு ஆதரவாக பேசியதாகச் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. ஆசிரியர் தலையங்கமும் எழுதப்பட்டிருந்தது.

அகாலிதள கூட்டத்தில் பேசப்பட்டதற்கும் எங்கள் இயக்கத்துக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது.

நகைமுகன் என்பவர் எமது இயக்கத்தைச் சேர்ந்தவர் அல்லர். அவர் எங்களது பிரதிநிதியாக அனுப்பப்படவும் இல்லை.

எனவே அவர் பேசியதற்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது.

காலிஸ்தான் பிரிவினைக் கோரிக்கையை எமது இயக்கம் ஆதரித்தது இல்லை. இனி மேலும் ஆதரிக்கப்போவதும் இல்லை.

விடுதலைப்புலிகள் இயக்கம் வெளி ஆட்கள் யாரையும் பிரதிநிதியாகவோ, அல்லது அங்கீகாரம் பெற்ற பேச்சாளராகவோ நியமிக்கவில்லை.

-- இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (உ-எ)

## 305 மௌலவி ஆசிரியர்கள் நியமனம் பெறவுள்ளனர்

புதிதாக 305 மௌலவி ஆசிரியர்கள் நியமிக்கப்படவிருக்கிறார்கள்.

அங்கீகரிக்கப்பட்ட மதரஸா கல்வி நிறுவனங்கள் நடத்திய இறுதிப் பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களுக்கே இந்த நியமனங்கள் வழங்கப்படவிருக்கின்றன.

நாடு முழுவதும் இஸ்லாம் போதனைக்கு ஆகக் குறைந்தது ஆயிரம் மௌலவி ஆசிரியர்களாவது தேவை எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

தற்போது சுமார் 300 மௌலவி ஆசிரியர்கள் பாடசாலைகளில் பணிபுரிந்து வருகின்றனர்.

மேலும் 305 மௌலவி ஆசிரியர்களை நியமிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருக்கிறது.

புதிய நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகளை தற்காலிகமாக இடைநிறுத்துவது என அரசு செய்திருக்கும் தீர்மானம் ரத்துச் செய்யப்பட்டதும் மௌலவி ஆசிரியர் நியமனம் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-2)

## வழிகாட்டி கோவை தயாரிக்க குழு

அமைச்சர்கள் மற்றும் ஆளும் கட்சி எம்.பிக்கள் வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொள்வது சம்பந்தமான வழிகாட்டி விதிகளின் கோவை ஒன்றைத் தயாரிக்க குழு ஒன்றை ஜனாதிபதி பிரேமதாஸா நியமித்தார்.

இக் குழுவின் தலைவராக பிரதமர் டி. பி. விஜேதுங்கா இருப்பார்.

அமைச்சர்கள் லலித்அத்துலத்முதலி, ரணில் விக்கிரமசிங்கா, எம் வின்சென்ட் பெரேரா ஆகியோர்குழுவின் ஏனைய உறுப்பினர்கள் ஆவர்.

உத்தியோகபூர்வ மற்றும் தனிப்பட்ட பயணங்களை மேற்கொள்வது குறித்தே வழிகாட்டி விதிகள் அமையும் என்று தெரிவிக்கப்பட்டது.

நாட்டுக்கு பயன்தரும் விஜயங்களை மட்டுமே மேற்கொள்வதை உறுதிப்படுத்துவதே வழிகாட்டி விதியின் நோக்கம் என்றும் அறிவிக்கப்பட்டது. (இ-எ)

## எழுத்தாளர் சச்சிகாலமானார்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

பிரபல எழுத்தாளரும் சமூக சமய சேவையாளருமான சட்டத்தரணி சச்சிதானந்தசிவம் அண்மையில் காலமாகினார். ரயிலில் பயணம் செய்தபோது மாரடைப்பு ஏற்பட்டு அவர் மரணமானதாகத் தெரிய வந்தது.

அவருடைய மறைவு தமிழ் மக்களுக்குப் பேரிழப்பு என்று அகில இலங்கைக் கவிஞர் கண்ணதாசன் மன்றத் தலைவர் வேலணை வேணியன் தமது அனுதாபச் செய்தியில் கூறியுள்ளார். (க)

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை கதிர்காமு

**[இளைப்பாறிய கிளாக்கரும் கண்டாவளையில் கமம் செய்பவரும்]**

புலோலி மேற்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கதிர்காமு (இளைப்பாறிய கிளாக்கரும் கண்டாவளையில் கமம் செய்பவரும்) காலமானார்.

அன்னார் லீலாவதியின் அன்புக் கணவரும், வரதராஜா (O.T.S), மங்களேசுவரி (டென்மார்க்), கனகராஜா (கிராம சேவையாளர், குமரபுரம்), புவனேசுவரி (கனடா), மகேஸ்வரி, சிறீஸ்கந்தராஜா (கனடா), வைகுந்தராஜா (டென்மார்க்), பேரின்பராஜா (சுவிற்சிலாந்து), மனோரஞ்சிதம், மங்கயற்கரசி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவக்கொழுந்து (டென்மார்க்), திருநாதன் (கனடா), மகேந்திரகுமாரி ஆகியோரின் அன்பு மாமனாரும், லச்சுமிப்பிள்ளையின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 05-04-1990 வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பருத்தித்துறை மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[12160]

### திரு. தம்பிமுத்து மகாலிங்கம்

**[ஓய்வுபெற்ற புகையிரதப் பகுதி லிகிதர்]**

ஊரெழு கிழக்கு ஓய்வுபெற்ற புகையிரதப் பகுதி லிகிதர் திரு. தம்பிமுத்து மகாலிங்கம் 04-04-1990 இல் காலமானார்.

அன்னார் திரு. சேதுலிங்கம் (செயலாளர், உள்நாட்டு அலுவல்கள் திணைக்களம்), காலஞ்சென்ற திருமதி இராசரத்தினம் தங்கரத்தினம் ஆகியோரின் சகோதரரும், அமிர்தரட்ணம், சிவபாதசுந்தரம், பஞ்சரட்ணம், பரதன் (ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்), அமரன் ஆகியோரின் மாமனாருமாவர்.

இறுதிக்கிரியைகள் 05-04-1990 வியாழக்கிழமை ஊரெழுவில் பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
அ. சிவபாதசுந்தரம்

[12161]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர்வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 05 - 04 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org